விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 304 வள்ளுவர் ஆண்டு 2054 ஐப்பசி 02 வியாழக்கிழமை (19.10.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## நீதியின் சுயாதீனத்தை உறுதிப்படுத்தக்கோரி

# வடக்குக் கிழக்கில்

# நாளை கதவடைப்பு

## 8 தமிழ்க் கட்சிகள் கூட்டாக அழைப்பு




*(யாழ்ப்பாணம்)* முல்லை நீதிபதியை அச்சுறுத்தியதைக் கண்டித்தும் நீதியின் சுயாதீனத்தை உறுதிப்படுத்தக்கோரியும் நாளை வெள்ளிக்கிழமை வடக்குக் கிழக்கில் பொது முடக்கம் முன்னெடுக்கப்படவுள்ளது. இதற்கு தமிழ் மக்கள் தமது ஒத்துழைப்பையும் ஆதரவையும் தருமாறு 8 தமிழ்க் கட்சிகள் கூட்டாக அழைப்பு விடுத்துள்ளன. *(02ஆம் பக்கம் பார்க்க)*

## நீதிச் சேவை ஆணைக்குழு முல்லை நீதிபதியிடம் விசாரணை

### நீதி அமைச்சர் விஜயதாஸ



(கொழும்பு)

மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாக குற்றச்சாட்டுகளை முன்வைத்த நீதிபதி சரவணராஜாவிடம் நீதிச்சேவை ஆணைக்குழு விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று 15

## யாழ் - தமிழக கப்பல் சேவை தற்காலிகமாக இடைநிறுத்தம்

### மீண்டும் ஜனவரி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறைக்கும் - நாகபட்டினத்துக்கும் இடையே ஆரம்பிக்கப்பட்ட பயணிகள் கப்பல் சேவை நாளை 20ஆம் திகதியுடன் தற்காலிகமாக இடைநிறுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 14ஆம் திகதி யாழ்ப்பாணம் - நாகபட்டினம் இடையே தொடங்கப்பட்ட பயணிகள் கப்பல் சேவை நாளை இடைநிறுத்தப்படுவதுடன் மீண்டும் எதிர்வரும் ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பெரும் எதிர்பார்ப்பிற்கு மத்தியில் ஆரம்பிக்கப்பட்ட 15

## காசா மருத்துவமனை மீது இஸ்ரேல் குண்டுத் தாக்குதல்

- சுமார் 500 பேர் உயிரிழப்பு
- தாக்குதலைக் கண்டித்து போராட்டம்
- உலகத் தலைவர்கள் கண்டனம்



9ஆம் பக்கம் பார்க்க

மக்கள் துயரம் அறியாமல்

## அரசு மின் கட்டணத்தை அதிகரிக்க மீண்டும் முயற்சி

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

(கொழும்பு)

மக்கள் துயரம் அறியாமல் மின் கட்டணத்தை அதிகரிக்க அரசு மீண்டும் முயற்சிக்கிறது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

மின்கட்டண அதிகரிப்பு தொடர்பாக நிலையியற் கட்டளை 27(2) 15


## அத்தியாவசிய பொருட்களின் விலை குறைப்பு

(கொழும்பு)

லங்கா சதொச நிறுவனம் 5 வகையான பொருட்களின் விலைகளை குறைக்கத் தீர்மானித்துள்ளது.

இந்த புதிய விலை திருத்தம் இன்று முதல் அமுலுக்கு வரும்என 15

## இந்திய கடற்படை கப்பல் இலங்கை வருகை



15

## மக்களாணையின் பிரகாரமே தேர்தலை மறுசீரமைக்கின்றோம்

### பிரதமர் தினேஸ் குணவர்த்தன



(கொழும்பு)

கடந்த தேர்தலில் மக்கள் வழங்கிய ஆணையின் பிரகாரம்தான் பாராளுமன்றத் தேர்தல்முறையை மறுசீரமைக்கும் யோசனையை அரசாங்கம் முன் 15

## நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்குக்...

யாழ். ஊடக அமையத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே தமிழ்க்கட்சிகள் அழைப்பு விடுத்த தோடு ஊடக அறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளன.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளதாவது,

இலங்கைத் தீவு சுதந்திரம் அடைந்து, 75 வருடங்கள் கடந்து விட்ட போதிலும், தமிழ் பேசும் மக்களாகிய நாம், உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையில், தொடர்ந்து நீதி கோரி நிற்கின்றோம்.

போர் முடிந்து 14 வருடங்கள் உருண்டோடி விட்டன. இருந்தும், இதுவரையில் எமக்கு நீதி வழங்கப்படவில்லை. மாறாக, எமது துன்பங்களும் துயரங்களும் நீடித்து நிற்கின்றன.

எம் மீதான அழுத்தங்களும் நெருக்குதல்களும் தொடர்கின்றன. எமது தாயகமான வட-கிழக்கு மாகாணங்களில் எமது பெரும்பான்மைப் பலத்தை சிதைத்து. இருப்பை பலவீனப்படுத்தி, உரிமை கோரி நாம் எழுந்து நிற்க முடியாத நிலைமையை காலப்போக்கில் ஏற்படுத்தும் இலக்குடன், அரசாங்க மட்டத்திலும் - அதன் ஆதரவோடும் பல்வேறு நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எமது தாயகத்தில், வரலாற்று ரீதியாக எமது வழிபாட்டு தலங்கள் அமைந்திருந்த பல்வேறு இடங்களில் பௌத்த விகாரைகள் அமைக்கப்பட்டு உள்ளன.

இந்த சட்ட விரோத நடவடிக்கைகளுக்கு எதிராக நீதிமன்றங்கள் வழங்கிய கட்டளைகள் மீறப்பட்டுள்ளன. முல்லைத்தீவில் குருந்தூர் மலை. திருகோணமலையில் கன்னியா மற்றும் விளையாட்டரங்க சுற்றாடல். யாழ்ப்பாணத்தில் தையிட்டி ஆகிய இடங்களில் புத்தர் சிலைகள் நிறுவப்பட்டுள்ளன. குருந்தூர் மலையிலும், தையிட்டியிலும் பௌத்த விகாரைகள் கட்டப்பட்டுள்ளன. திருகோணமலையில் இலுப்பைக்குளத்தில், விகாரை ஒன்றுக்கான முன் நடவடிக்கைகள், ஆளுநரின் கட்டளையையும் மீறி, மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தொல் பொருள் திணைக்களம், வனத் திணைக்களம். வன ஜீவராசிகள் திணைக்களம் என்பன எமது பெருந் தொகையான காணிகளை ஆக்கிரமித்து அபகரித்துள்ளன.

காணிகள் மீளக் கையளிக்கப்படும் என்று அரசாங்கம் அளித்த வாக்குறுதிகள் நிறை வேற்றப்படவில்லை.

இதேவேளையில், மட்டக்களப்பு மாவட்டத்தில். மயிலத்தமடு - மாதவனை பிரதேசத்தில் தமிழ்ப் பண்ணையாளர்களின் பல்லாயிரக்கணக்கான கால் நடைகளின் மேய்ச்சல் தரவையாக மிக நீண்ட காலமாக பயன்படுத்தப்பட்டு வந்த பாரிய பிரதேசத்தை, சிங்களக் குடியேற்ற வாசிகள் ஆக்கிரமித்து பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ளனர்.

தமிழ்ப் பண்ணையாளர்களின் கால் நடைகள் ஆக்கிரமிப்பாளர்களால் பெருந் தொகையில் பிடிக்கப்பட்டும். சுடப்பட்டும். கொல்லப்பட்டும் உள்ளன. இதனால் பண்ணையாளர்களின் வாழ்வே இருண்டு போய் உள்ளது. பயிர் அறுவடை முடிந்தவுடன் குடியேற்ற வாசிகள் வெளியேறி விடுவார்கள் என்று அரசாங்கத்தரப்பில் கடந்த வருடம் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகாற்றோடு கலந்து போய் பல மாதங்கள் ஆகிவிட்டது.

ஆக்கிரமிப்பு தொடர்கின்றது. மறுபுறத்தில், குருந்தூர்மலை ஆலய வழக்கில் எமது மக்களின் வழிபாட்டு உரிமையை ஏற்றுக் கொண்டு தீர்ப்பளித்த முல்லைத்தீவு நீதிபதி, அச்சுறுத்தல்கள் மற்றும் கொலை மிரட்டல்களின் விளைவாக நாட்டை விட்டே தப்பிச் சென்றுள்ளார்.

யுத்த காலத்தில் நிகழ்த்தப்பட்ட பல நூற்றுக்கணக்கான படுகொலைகளில், சர்வதேசத்தை திருப்திப்படுத்த, சிலவற்றுக்கு வழக்குகள் தொடுக்கப்பட்டதனை நீங்கள் அறிவீர்கள்.

மூதூர் - குமாரபுரம் படுகொலைகள் தொடர்பான வழக்கு அநுராதபுரத்திற்கு மாற்றப்பட்டு, சிங்கள யூரி சபையினர் முன்பு விசாரணை செய்யப்பட்டதன் முடிவில், எதிரிகளான இராணுவத்தினர் அனைவரும் விடுதலை செய்யப்பட்டதை யார்தான் மறக்க முடியும்? அதைப்போலவே, மிருசுவில் படுகொலைகள் பற்றிய வழக்கில் மரணதண்டனை விதிக்கப்பட்டிருந்த இராணுவ அதிகாரிக்கு, கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக வந்த பின், பொது மன்னிப்பு வழங்கப்பட்டு அவர் விடுதலை செய்யப்பட்டதை எவரும் மறந்துவிட முடியாது.

மேலும், யுத்தம் மீண்டும் வெடித்த போது, 5 தமிழ் மாணவர்கள் திருகோணமலை கடற்கரையில் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பிலும் நீதி மறுக்கப்பட்டது. கொழும்பில் வைத்து கடத்தப்பட்ட 11 தமிழ் இளைஞர்கள்திருகோணமலைக்கு கொண்டு வரப்பட்டு, கொலை செய்யப்பட்ட சம்பவங்களிலும் உண்மை புதைக்கப்பட்டு விட்டது.

இவை எல்லாம் இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிரான குற்றங்களைச் செய்வோர் தண்டிக்கப்படாமல், தப்பிவிடுவார்கள் என்பதற்கு உறுத்தும் உதாரணங்கள் ஆகும்.

இப்பொழுது, நீதிக்காக துணிந்து நின்ற முல்லைத்தீவு மாவட்ட நீதிபதிக்கு நேர்ந்திருக்கும் கதி தொடர்பிலும் உண்மை மழுப்பப்பட்டு, மறைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது!

இந்தச் சூழ்நிலையில், இந்த நாட்டில் தமிழ் பேசும் மக்கள் தொடர்ச்சியாக அனுபவித்து வரும் அநீதிகளையும், நீதி மறுக்கப்படுவதையும் உலகத்தின் கவனத்திற்கு மீண்டும் கொண்டு வரும் நோக்கத்துடனும், எமது மக்களின் காணிகள் அபகரிக்கப்பட்டு அவற்றில் பௌத்த விகாரைகள் அமைக்கப்படுவதை கண்டித்தும், மயிலத்தமடு மாதவனை மேய்ச்சல் தரவையை ஆக்கிரமித்து இருப்போரை வெளியேற்றக் கோரியும், எமது தாயகமான வட- கிழக்கு மாகாணங்களில் ஹர்த்தால் எனப்படும் ஒரு பொது முடக்கத்திற்கு தமிழ்த்தேசியக்கட்சிகளாகிய நாம்ஒன்றிணைந்து அழைப்பு விடுக்கின்றோம்.

கிழக்கை தளமாகக் கொண்டு இயங்கும் முஸ்லிம் அரசியல் கட்சிகளும் இதற்கு ஆதரவு தர முன்வந்துள்ளன. இந்நிலையில், நாளை வெள்ளிக்கிழமை நிகழவுள்ள இந்த பொது முடக்கத்திற்கு, வட- கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் பேசும் மக்களின் ஆதரவையும் ஒத்துழைப்பையும் நாம் உரிமையுடன் வேண்டுகின்றோம்.

மேலும், எம் மக்கள் மத்தியில் செயற்பட்டுக் கொண்டிருக்கும் மனித உரிமை இயக்கங்கள், பல்கலைக்கழக மாணவர் ஒன்றியங்கள் உட்பட மாணவர் அமைப்புக்கள், மகளிர் உரிமை நிறுவனங்கள், தொழிற்சங்கங்கள், வணிகர் கழகங்கள், சிவில் சமூக சங்கங்கள் மற்றும் மத ஸ்தாபனங்கள் உட்பட, பல்துறை சார்ந்த செயற்பாட்டு அமைப்புக்களின் ஆதரவையும் பங்களிப்பையும் இந்த மக்கள் போராட்டத்தில் நாம் நாடி நிற்கின்றோம் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

என இலங்கைத் தமிழரசுக் கட்சி தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ), தமிழ் ஈழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்), தமிழ் மக்கள் கூட்டணி , ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழ்த் தேசியக் கட்சி ஜனநாயகப் போராளிகள் கட்சி , ஈழத் தமிழர் சுயாட்சிக் கழகம் ஆகியன இணைந்து அறிக்கை வெளியிட்டுள்ளது. (ம-7,33,104)


## பணியாளர்கள் தேவை

இலுப்பகடவை மன்னார் பிரதேசத்தில் அமைந்துள்ள உணவகம் ஒன்றிற்கு பின்வரும் பணியாளர்கள் தேவைப்படுகின்றனர்.

1. காசாளர் - ஆண்/ பெண்
2. கொள்வனவாளர் - ஆண் (மோட்டார் சைக்கிள் வைத்திருத்தல் வேண்டும்.)
3. சமையலாளர் (தங்கி வேலை செய்வது விரும்பத்தக்கது)

மேற்படி பணியாளர்கள் இலுப்பகடவை பிரதேசத்திற்கு அண்மையில் இருப்பவர்கள் உடனடியாக தொடர்பு கொள்ளவும்.

(C-7443)

**074 386 3050**

## மலிவு விற்பனை

கடந்த 40 வருடங்களாக யாழ்.மக்களின் நன் மதிப்பைப் பெற்ற SILVER SHIELD SOCKS பாடசாலை மாணவர்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் ஏற்ற நைலோன்/ கொட்டன் காலுறைகள் (SOCKS) மலிவு விலையில்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளவும்


உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து ஒருசில நிமிடங்களில் உங்கள் பணத்தை

WESTERN UNION MONEY TRANSFER | Ria | MoneyGram. money transfer

ஊடாக பெற்றுக்கொள்ளவும். (C-7427)

**ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்**
**303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.**
**021 222 5392, 076 315 6470**


## மரண அறிவித்தல்



### சந்திரசேகரம் சிறிறஞ்சன் (ரஞ்சன்)

தொண்டைமானாற்றைப் பிறப்பிடமாகவும் வண்ணார்பண்ணை நாச்சிமார் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட சிறிறஞ்சன் (ரஞ்சன்) அவர்கள் 17.10.2023 செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சந்திரசேகரம் - பரமேஸ்வரி தம்பதிகளின் கனிஸ்ட புதல்வனும் தெய்வேந்திர ஐயர்(பிரதம குரு சிறீ செல்வச்சந்நிதி ஆலயம்) காலஞ்சென்ற மாணிக்கம் தம்பதிகளின் அன்பு மருமகனும் மகேந்திரராணியின் அன்புக் கணவரும் கபிலன், லோகஜன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவகுமார்(இந்தியா), சந்திரகுமாரி (கனடா), லலிதகுமாரி, வாசுதேவன்(கனடா), சுமதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ரமணி, ஹரிகரன், பாலச்சந்திரன்(ஓய்வுநிலை ஆசிரியர்), குமுதினி, ரூபசிங்கம் (ஓய்வுநிலை ஆசிரியர்), ஜெயந்திரன், சசிந்திரன்(சமுர்த்தி உத்தியோகத்தர்), ரவிந்திரன் அமரர் துசியேந்திரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை 20.10.2023 வெள்ளிக்கிழமை 596/4, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்த அவரது இல்லத்தில் காலை 10.00 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

021 222 5067
077 328 8279

(17509)

தகவல்:
குடும்பத்தினர்

## அகவை 50ல் அக மகிழ்ந்த வாழ்த்துக்கள்




திரு. குமாரசாமி
செந்தில்குமார்
(விஷேட தர தாதிய உத்தியோகத்தர்
போதனா வைத்தியசாலை
யாழ்ப்பாணம்)

வாழ்வில் சகல செல்வங்களையும் பெற்று இன்றுபோல் என்றும் இன்பமாக வாழ்ந்திட அன்போடு வாழ்த்துகிறோம்.

(17507)

அன்போடு வாழ்த்தும்
பண்ணாக தாதியர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் நீர் வளம் அபாய நிலையில் - ஐ.நா

(ஜெனீவா)


**இலங்கையில் நீர் வளங்களுக்கான அபாய நிலை தொடர்ந்தும் அதிகமாகவே காணப்படுவதாக ஐக்கிய நாடுகள் சபையின் உலக உணவுத் திட்டம் அறிவித்துள்ளது.**

உலக உணவு தினத்தை முன்னிட்டு கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் வைத்து அந்த அமைப்பின் பிரதிநிதிகள் இந்த விடயத்தை வலியுறுத்தியுள்ளனர்.

தற்போது நாட்டிலுள்ள மொத்த நன்னீரில் 82 சதவீதமானவை நெல் விவசாயத்துக்கு மாத்திரம் பயன்படுத்தப்படுவதாக உலக உணவுத் திட்டத்தின் அதிகாரிகள் இதன்போது குறிப்பிட்டுள்ளனர்.

நாட்டின் நன்னீர் வளங்கள் மற்றும் அவற்றின் நிலைத்தன்மையை பாதுகாப்பதில் கவனம் செலுத்தப்பட வேண்டும் எனவும் உணவுப் பாதுகாப்பிற்காக இலங்கை உடனடியாக நிலையான விவசாயத்தை நோக்கி இடம்பெயர வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபையின் உலக உணவுத் திட்டம் அறிவித்துள்ளது. (நி-5-6)

# பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை சமர்ப்பிக்கப் போவதில்லை-சபாநாயகர்



(கொழும்பு)

பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் போவதில்லை என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற பாராளுமன்ற அமர்விலேயே மஹிந்த யாப்பா அபேவர்தன இந்த அறிவிப்பினை வெளியிட்டிருந்தார்.

பாராளுமன்ற நிகழ்ச்சி நிரலில் இந்த சட்டமூலம் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும், அது முன்வைக்கப்படாது என மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார். (நி-5-6)

# மசகு எண்ணெய் விலை தொடர்ந்தும் அதிகரிப்பு

(வோஷிங்டன்)

ஹமாஸ் தரப்பினருக்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான மோதலை அடுத்துச் சர்வதேச சந்தையில் மசகு எண்ணெய்யின் விலை தொடர்ந்தும் அதிகரிப்பை பதிவு செய்து வருகிறது.

இதன்படி, மசகு எண்ணெய்யின் விலை நேற்றைய தினமும் அதிகரிப்பை பதிவு செய்துள்ளது.

உலக சந்தையில் WTI ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 88.15 அமெரிக்க டொலராக அதிகரிப்பை பதிவு செய்துள்ளது.

அத்துடன் பிரெண்ட் ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 89.90 அமெரிக்க டொலராக பதிவாகியுள்ளது.

இதேவேளை, உலக சந்தையில் இயற்கை எரிவாயுவின் விலை 3.06 அமெரிக்க டொலராக நிலவுகிறது. (நி-5-6)

# ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்தை நீக்க வேண்டிய அவசியம் இல்லை

## விஜயதாஸ ராஜபக்ஷ

(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை நீக்க வேண்டிய தேவை அரசாங்கத்திற்கு கிடையாது என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ நேற்று சபையில் தெரிவித்தார்.

எதிர்க்கட்சி பிரதம கொரடாவான லக்ஷ்மன் கிரியெல்ல முன்வைத்த குற்றச்சாட்டுக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இவ் விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேர்தல் முறையில் மாற்றத்தை ஏற்படுத்தும் தீர்மானத்தை தான் நாம் அமைச்சரவையில் சமர்ப்பித்துள்ளோம்.

ஆனால், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை இல்லாது செய்ய நாம் நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது முற்றிலும் பொய்யான ஒரு விடயமாகும். எமக்கு அப்படி செய்ய வேண்டிய தேவையும் கிடையாது.



நாம் செய்ய முடியுமான செயற்பாடுகளை மட்டும்தான் செய்வோம் என அவர் மேலும் தெரிவித்தார். (நி-5-6)

# மதுபான அனுமதிப்பத்திரம் தற்காலிகமாக இடைநிறுத்தம்

(கொழும்பு)

ஹோட்டல்கள் மற்றும் உணவகங்களுக்கு மதுபான அனுமதிப்பத்திரம் வழங்குவதை தற்காலிகமாக நிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கலால் திணைக்களத்தின் மேலதிக ஆணையாளர் நாயகம் கபில குமாரசிங்க நேற்று புதன்கிழமை இதனைத் தெரிவித்துள்ளார்.

நீதிமன்ற உத்தரவுக்கு அமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கபில குமாரசிங்க குறிப்பிட்டுள்ளார். (நி-5-6)

# ஐ.எம்.எப் உடனான கலந்துரையாடல் மீண்டும் வெற்றி

## நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு



(கொழும்பு)

இரண்டாம் தவணையை பெற்றுக்கொள்வதற்கான ஊழியர் மட்ட ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் நோக்கில் இலங்கைக்கும் சர்வதேச நாணய நிதியத்துக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடல் வெற்றி அடைந்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

இரண்டாவது தவணை இரண்டு வாரங்களில் வெளியிடப்படும் என எதிர்பார்ப்பதாக இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

ஆழமான பொருளாதார நெருக்கடியை இலங்கையால் ஒரே இரவில் சமாளிக்க முடியாது என்றும், எனவே ஸ்திரத்தன்மை மற்றும் இயல்பு நிலையை மீட்டெடுக்க பல சர்வதேச நாடுகளுடன் விவாதங்கள் நடத்தப்பட வேண்டும் என்பதை பொதுமக்கள் கவனத்தில் கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்தார்.

கடந்த வருடம் இலங்கையில் இருந்த நிலைமை தற்போது மாறியுள்ளது. சில வேறுபாடுகளை களைவதற்கு சர்வதேச நாணய நிதியத்துடனான விவாதங்கள் மிகவும் வெற்றிகரமாக அமைந்துள்ளதாகவும் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

# 30 பண்ணைகளை இந்தியாவிற்கு விற்க தயாராகும் அரசாங்கம்

## எதிர்க்கட்சித் தலைவர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

மில்கோ நிறுவனம் மற்றும் தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபைக்கு சொந்தமான 30 பண்ணைகளை இந்திய அமுல் நிறுவனத்துடன் ஒருங்கிணைந்த கூட்டு வியாபார நிறுவனமாக நிறுவ அரசாங்கம் தயாராகி வருகிறது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பொருத்தமான அரச, தனியார் கூட்டாண்மை மாதிரியை அடையாளம் காணாமல், பல அரச முயற்சியாண்மைகளை வெளிநாட்டு நிறுவனங்களுக்கு விற்பனை செய்ய ஏற்பாடு செய்வதன் மூலம், இந்நாட்டில் பொது வளங்கள் சரியான நிறுவனங்களுக்கு கை மாற்றுவதும், மோசடி மற்றும் ஊழலுக்கு இடம் கொடுப்பதுமே இடம்பெறுகிறது.

அத்துடன் அரசாங்கத்தின் இந்த தீர்மானம் காரணமாக இந்த நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களின் தொழில் பாதுகாப்பு கேள்விக்குறியாகியுள்ளது.

அரசாங்கம் இவ்வாறு விற்பனை செய்ய முற்படுவது கொழும்பு பால் நிறுவனம், அம்பேவெல ஸ்பிரேடை தொழிற்சாலை, திகன பால் தொழிற்சாலை, பொலன்நறுவை தொழிற்சாலை மற்றும் தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபைக்குச் சொந்தமான 30 இற்கும் மேற்பட்ட பண்ணைகள் என்பனவாகும்.

இது தொடர்பில் தொழிற்சங்கங்கள் சம்பந்தப்பட்ட அமைச்சரிடம் வினவிய போது, ஜனாதிபதி செயலகத்தினால் கொண்டு வரப்பட்ட அமைச்சரவை தீர்மானத்தில் தான் கையொப்பமிட்டதாக சம்பந்தப்பட்ட விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக குறித்த அமைச்சர் விளக்கம் அளிக்க வேண்டும். உள்நாட்டு பாலை வைத்து நாடு தன்னிறைவு அடையும் என்று எல்லா மேடைகளிலும் பேசப்பட்டாலும், தற்போது இந்த பண்ணைகளை விற்பதற்கு இடமளிக்க முடியாது.

அத்துடன் அரசாங்கம் இது தொடர்பில் இந்திய நிறுவனத்துடன் ஒப்பந்தம் கைச்சாத்திட்டுள்ளது.

அதனால் குறித்த ஒப்பந்தத்தை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா? அந்த ஒப்பந்தத்தில் இருக்கும் விடயங்களை அரசாங்கம் வெளிப்படுத்துமா எனக் கேட்கிறோம் என அவர் கேள்வி எழுப்பினார். (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஆப்கானிஸ்தானை வீழ்த்தி நியூஸிலாந்து அபார வெற்றி



உலகக் கிண்ண கிரிகெட் போட்டியில் ஆப்கானிஸ்தானை வீழ்த்தி நியுஸிலாந்து அணி அபார வெற்றி பெற்றது.

உலக கிண்ணத் தொடரின் நேற்றைய போட்டியில் ஆப்கானிஸ்தான் மற்றும் நியூஸிலாந்து ஆகிய அணிகள் மோதின.

நேற்று பிற்பகல் சென்னை மைதானத்தில் இடம்பெற்ற போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற ஆப்கானிஸ்தான் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதற்கமைய, முதலில் துடுப்பாடிய நியூஸிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் 6 விக்கட்டுக்களை இழந்து 288 ஓட்டங்களை பெற்றுள்ளது.

நியூஸிலாந்து அணி சார்பில் Glenn Phillips அதிகபட்சமாக 71 ஓட்டங்களை பெற்றதுடன் அணியின் தலைவர் Tom Latham 68 ஓட்டங்களையும் Will Young 54 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் ஆப்கானிஸ்தான் அணி சார்பில் Naveen-ul-Haq, Azmatullah Omarzai தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்கள்.

இந்நிலையில், 289 என்ற வெற்றியிலக்கை நோக்கி துடுப்பாடிய ஆப்கானிஸ்தான் அணி 34.4 ஓவர்களில் சகல விக் கட்டுகளையும் இழந்து 139 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

அந்த அணி சார்பில் Rahmat Shah அதிகபட்சமாக 36 ஓட்டங்களை பெற்றதுடன் Ikram Alikhil ஆட்டமிழக்காமல் 19 ஓட்டங்களை பெற்றார்.

பந்து வீச்சில் நியூசிலாந்து அணி சார்பில் Mitchell Santner மற்றும் Lockie Ferguson ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இதன்படி நியூஸிலாந்து அணி 149 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

நியூசிலாந்து அணி இதுவரை பங்கேற்ற 4 போட்டிகளிலும் வெற்றிப்பெற்று புள்ளிப்பட்டியலில் மீண்டும் முதலிடத்தை பிடித்துள்ளது. (ம-7)



## இந்தியாவின் முன்னாள் கப்டன் கபில் தேவின் 36 ஆண்டுகால சாதனையை முறியடித்த நெதர்லாந்து கப்டன்



இந்திய அணியின் முன்னாள் கப்டன் கபில் தேவின் 36 ஆண்டுகால சாதனையை முறியடித்தார் நெதர்லாந்து கப்டன்.

உலகக் கோப்பை 2023 கிரிக்கெட் தொடரின் நேற்று முன்தினம் 15 வது லீக் போட்டியில் தென்னாப்பிரிக்கா- நெதர்லாந்து அணிகள் மோதின.

இப் போட்டியில், உலகக் கோப்பை வரலாற்றில் முதல்முறையாக ஒரு டெஸ்ட் அந்தஸ்து பெற்ற அணிக்கு எதிராக வெற்றியை பதிவு செய்து நெதர்லாந்து சாதனை படைத்தது. அத்துடன் 2007-க்குப்பின் 16 வருடங்கள் கழித்து முதல் முறையாக உலக கோப்பையில் வெற்றியை பதிவு செய்து நெதர்லாந்து அசத்தியது.

இந்த சரித்திர வெற்றிக்கு 78 ரன்கள் எடுத்து முக்கிய பங்காற்றிய நெதர்லாந்து கேப்டன் ஸ்காட் எட்வர்ட்ஸ் ஆட்டநாயகன் விருதை வென்றார்.

7வது இடத்தில் களமிறங்கிய அவர் 10 பவுண்டரி 1 சிக்சருடன் 78 (69) ரன்கள் குவித்து வெற்றி பெற உதவினார். இதன் வாயிலாக உலகக்கோப்பை வரலாற்றில் 7ஆவது இடத்தில் களமிறங்கிய அதிகபட்ச ஸ்கோர் பதிவு செய்த கப்டன் என்ற இந்திய ஜாம்பவான் கபில் தேவ் சாதனையை அவர் முறியடித்துள்ளார்.

இதற்கு முன் 36 வருடங்களுக்கு முன் நடைபெற்ற 1987 உலகக்கோப்பையில் பெங்களூருவில் நடந்த நியூசிலாந்துக்கு எதிரான போட்டியில் கபில் தேவ் 7 ஆவது இடத்தில் களமிறங்கி 72 (58) ரன்கள் அடித்து அந்த சாதனையைப் படைத்து இந்தியா 16 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற உதவினார். (ம-7)




## பாகிஸ்தான் வீரர்களுக்கு வைரஸ் காய்ச்சல்

உலகக் கோப்பை கிரிக்கெட்டில் பாகிஸ்தான் அணி அடுத்து அவுஸ்திரேலியாவை நாளை பெங்களூருவில் எதிர்கொள்கிறது.

இந்த நிலையில் பாகிஸ்தான் அணியில் பல வீரர்கள் திடீரென வைரஸ் காய்ச்சலால் பாதிக்கப்பட்டனர்.



அவர்களில் பெரும்பாலானோர் முழுமையாக குணமடைந்து விட்டதாகவும், சிலர் மருத்துவ கண்காணிப்பில் இருப்பதாகவும் அந்த அணியின் செய்தி தொடர்பாளர் கூறியுள்ளார். தொடக்க ஆட்டக்காரர் அப்துல்லா ஷபிக் தற்போது அவரது அறையில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார். (ம-7)

### உலகக் கிண்ண கிரிக்கெட் - 2023 புள்ளிகள் பட்டியல்

| நிலை | அணி | போட்டி | வெற்றி | தோல்வி | புள்ளி |
|---|---|---|---|---|---|
| 1 | நியூசிலாந்து | 4 | 4 | 0 | 8 |
| 2 | இந்தியா | 3 | 3 | 0 | 6 |
| 3 | தென்னாபிரிக்கா | 3 | 2 | 1 | 4 |
| 4 | பாகிஸ்தான் | 3 | 2 | 1 | 4 |
| 5 | இங்கிலாந்து | 3 | 1 | 2 | 2 |
| 6 | பங்களாதேஷ் | 3 | 1 | 2 | 2 |
| 7 | அவுஸ்திரேலியா | 3 | 1 | 2 | 2 |
| 8 | நெதர்லாந்து | 3 | 1 | 2 | 2 |
| 9 | ஆப்கானிஸ்தான் | 4 | 1 | 3 | 2 |
| 10 | இலங்கை | 3 | 0 | 2 | 0 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய மீனவர்களின் கைதினை கண்டித்து ஆர்ப்பாட்டம்




(சென்னை)

இலங்கை கடற்படையால் சிறைபிடிக்கப்பட்ட 27 மீனவர்களையும் 5 விசைப்படகுகளையும் உடனடியாக விடுவிக்குமாறு வலியுறுத்தி இராமேஸ்வரம் தபால் தந்தி அலுவலகம் முன்பு நேற்று புதன்கிழமை காலை பாதிக்கப்பட்ட மீனவர்களும் மீனவ சங்க அமைப்புகளைச் சேர்ந்தவர்களும் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர். (நி-5-6)

# கதவடைப்புக்கு ஆதரவு கோரி வவுனியாவிலும் துண்டுப்பிரசுரம்



(குருமன்காடு)

வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்படவுள்ள ஹர்த்தால் போராட்டம் தொடர்பாக தமிழ்த் தேசியகட்சிகளின் கூட்டமைப்பால் வவுனியா நகரில் துண்டு பிரசுரங்கள் நேற்று வழுங்கி வைக்கப்பட்டது.

முல்லைத்தீவு நீதிபதி சரவணராஜா மீதான அச்சுறுத்தலின் மூலம் நீதித்துறை சுயாதீனமாக செயற்பட முடியாத நிலமை, வடக்கு கிழக்கில் பௌத்தமயமாக்கல், தமிழர் பிரச்சனைக்கு உள் நாட்டில் நீதியை காணமுடியாது போன்ற பல்வேறு விடயங்களை உள்ளடங்கி நாளை வெள்ளிக்கிழமை ஹர்த்தால் முன்னெடுக்கப்படவுள்ளது.

இதனை முன்னிட்டு வன்னி பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், முன்னாள் நகர சபை தலைவர் இ.கௌதமன், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் செ.மயூரன், முன்னாள் நகரசபை உறுப்பினர் சந்திரகுலசிங்கம் என பலரும் கலந்து கொண்டு துண்டுப் பிரசுரங்களை வழங்கும் செயற்பாட்டினை முன்னெடுத்திருந்தனர்.

(நி-5-6-250)

# சாவகச்சேரி நகராட்சி மன்றம்

## 2024 ஆம் ஆண்டுக்கான கேள்வி அறிவித்தல்

சாவகச்சேரி நகராட்சி மன்ற அதிகார எல்லைக்குட்பட்ட கீழ் குறிப்பிடப்படுகின்ற பொதுச்சந்தை, வாகனத்தரிப்பிடம், கருவாட்டுக்கடை மற்றும் இறைச்சிக் கடைகளை 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றது.

01. கேள்விப் பத்திரங்களை கீழ்க்குறிப்பிட்ட மீளளிக்கப்படாத படிவக்கட்டணம், மீளளிக்கப்படக்கூடிய வைப்புப்பணம் என்பவற்றை செலுத்தி நகராட்சி மன்ற அலுவலகத்தில் 19.10.2023 தொடக்கம் 01.11.2023 ஆம் திகதி வரையான அலுவலக நாட்களில் மு.ப 9.30- பி.ப 2.00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம். கேள்விப்பத்திரங்களை பெறுபவர் தமது தேசிய அடையாள அட்டையுடன் அதன் போட்டோ பிரதியையும் கிராமசேவகரினால் வழங்கப்பட்டு பிரதேச செயலரினால் மேலொப்பமிடப்பட்ட வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி :-02.11.2023 ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப 10.00 மணி
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி :- 02.11.2023 ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப 10.00 மணி

02. கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளில் பூர்த்தி செய்யப்பட்டு தனித்தனியாக மூலப்பிரதி இணைப்பிரதி என இரு உறைகளில் வைத்து செயலாளர், நகராட்சி மன்றம், சாவகச்சேரி என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக குறிப்பிடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடுதல் வேண்டும். 02.11.2023 மு.ப 10.00 மணிக்குப் பின்னர் சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

03. எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச் சபைக்கு பூரண அதிகாரமுண்டு.

04. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறுனராக பட்டியலிடப்பட்டவர்களுக்கு கேள்விப் படிவம் வழங்கப்படமாட்டாது என்பதுடன் படிவம் வழங்கப்பட்ட பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் கேள்விப்பத்திரம் நிராகரிக்கப்படும்.

05. ஏற்றுக் கொள்ளக் கூடிய குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்படமாட்டாது.

06. கேள்விகள் திறக்கப்படும் அத்தருணம் கேள்விதாரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.

07. தெரிவு செய்யப்படும் கேள்விதாரர் தாங்கள் தெரிவு செய்யப்பட்டமை தொடர்பாக அறிவிக்கப்பட்ட கடிதத்திகதியிலிருந்து 07 நாட்களுக்குள் கேள்வித் தொகையின் 1/3 பகுதியை செலுத்தி சபையுடன் நிபந்தனைகளை உள்ளடக்கிய ஒப்பந்தம் ஒன்றினை செய்து கொள்ள வேண்டும்.

08. கேள்வி தொடர்பான மேலதிக விபரங்களை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

2024 ஆம் ஆண்டு பொதுச்சந்தை, வாகனத்தரிப்பிடம், இறைச்சிக்கடைகள் மற்றும் கருவாட்டுக் கடைக்கான குத்தகை அட்டவணை

| இல | குத்தகை விபரம் (01.01.2024 – 31.12.2024) | ஆகக்குறைந்த கேள்வித்தொகை (இதரவரிகள் தவிர) | கேள்விவைப்புப் பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப்படிவக் கட்டணம் (இதர வரிகள் தவிர) (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|---|
| 01 | சாவகச்சேரி பொதுச் சந்தை (மீன்சந்தை, உள்ளடங்கலாக) | 16,280,000.00 | 163,000.00 | 2,000.00 |
| 02 | வாகனத்தரிப்பிடம் | 825,000.00 | 8,300.00 | 2,000.00 |
| 03 | கருவாட்டுக் கடை இல : 01 | 133,750.00 | 1,500.00 | 2,000.00 |
| 04 | ஆட்டிறைச்சிக் கடை இல : 01 | 402,000.00 | 4,500.00 | 2,000.00 |
| 05 | மாட்டிறைச்சிக் கடை இல : 01 | 1,717,500.00 | 17,500.00 | 2,000.00 |
| 06 | மாட்டிறைச்சிக் கடை இல : 02 | 1,717,500.00 | 17,500.00 | 2,000.00 |
| 07 | கோழி இறைச்சிக் கடை இல : 01 | 1,495,000.00 | 15,000.00 | 2,000.00 |
| 08 | கோழி இறைச்சிக் கடை இல : 02 | 1,495,000.00 | 15,000.00 | 2,000.00 |

குறிப்பு: இந்நகராட்சி மன்றத்தின் பொதுச் சந்தை, இறைச்சிக்கடை, கருவாட்டுக் கடையிலிருந்து 1/2 km சுற்றுவட்டத்திற்குள் தனியார் எவரும் மரக்கறி, இறைச்சி, கருவாடு என்பன விற்பனை செய்ய அனுமதிக்கப்படமாட்டார்கள்.
உற்பத்தியாளர்களினால் சந்தைக்கு கொண்டு வரப்படும் விவசாய உற்பத்திப்பொருட்களுக்கு 10% கழிவு நடைமுறையினை பின்பற்ற முடியாது.

(சி-7446) செயலாளர்,நகராட்சி மன்றம், சாவகச்சேரி. 18.10.2023


# இராசிபலன்

19.10.2023
ஐப்பசி 02, வியாழக்கிழமை
பஞ்சமி முன்னிரவு 11.04 மணிவரை

கேட்டை முன்னிரவு 8.27 மணிவரை
சுபநேரம் -7.32-9.02 மணிவரை
இராகுகாலம்-1.32-3.02 மணிவரை

சந்திராஷ்டமம்-
கார்த்திகை, ரோகிணி.

வளவன்





தேவையற்ற விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, மனதில் இனம் புரியாத கவலைகள் தோன்றி மறையும், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம்.




சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.




செய்தொழிலில் உற்சாகம் காட்டுவீர்கள், பொது வாழ்வில் சுவாரஸ்யம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், கடன் பிரச்சினைகளைச் சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள்.




புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், மற்றவர் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.




வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், நண்பர்கள் சந்திப்பால் சுப செய்திகள் வந்து சேரலாம், புதிய முயற்சிகளில் ஆர்வம் கூடும், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.




எடுத்த காரியங்களை எளிதில் செய்து முடித்து வெற்றி காண்பீர்கள், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காக வள்ளல்களின் உதவியை நாடுவீர்கள், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் கூடும் நாள்.





சுப காரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், பக்கபலமாக இருப்பவர்களின் எண்ணிக்கை கூடும், உங்களின் பொறுமைக்கு இன்று பரிசு கிடைக்கும்.




ஆழ்ந்த சிந்தனையுண்டு, புதிய பொறுப்புக்கள் தேடி வரலாம், போசன சுகமுண்டு, எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும்.




நண்பர்கள் வழியில் சுப விரயங்கள் ஏற்படலாம்,திட்டமிட்ட காரிய மொன்றில் திசைதிருப்பங்கள் ஏற்படலாம், மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும்.




வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.




நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கூடும், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள்.




எதிர்பார்ப்புகள் நிறைவேறும் நாள், அன்பால் சாதித்துக் காட்டும் நாள், புதிய முயற்சிகள் கைகூடும் வாய்ப்புண்டு, கொடுக்கல்--வாங்கல்கள் ஒழுங்காகும்.

என்ன சொல்லி இதமாக உபதேசித்தாலும் பகைவனுக்கு உபதேசம் காதில் ஏறாது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பேருந்து நிலையத்தில் பிறந்த நாள் கொண்டாட்டம்
## மேலும் ஐவர் கைது

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாண மத்திய பேரு ந்து நிலையத்தில் பொது மக்க ளுக்கு இடையூறு விளை வித்து, பிறந்த நாள் கொண்டாடிய கும்பலை சேர்ந்த மேலும் ஐவர் கைது செய்ய ப்பட்டுள்ளனர்.

யாழ்.மாவட்ட பிராந்திய குற்றத்தடுப்பு பிரிவு பொலி ஸாரால் குறித்த கைது நட வடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

குறித்த சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெ டுத்த பொலிஸார் இருவரை கைது செய்து கடந்த சனிக் கிழமை நீதவான் முன்னி லையில் முற்படுத்தி இருந்த னர்.

குறித்த இருவரையும் 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்ட நீதவான், சம்பவத்துடன் தொடர்புடைய பிறந்த நாள்காரன் உள்ளிட்ட அனைவரையும் கைது செய்து முற்படுத்த வேண்டும் என பொலிஸாருக்கு பணித்திரு ந்தார்.

அதனை அடுத்து பொலி ஸார் விசாரணையை முன் னெடுத்த நிலையில் ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ள தைய டுத்து ஐவரையும் யாழ். நீதி வான் நீதிமன்றத்தில் முற் படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.(நி-5-6-33)

# கதவடைப்பிற்கு ஆதரவு கோரி யாழில் பிரச்சார நடவடிக்கை

(அராலி)
வடக்கு கிழக்கில் நாளை முன்னெடுக்கவுள்ள பூரண கதவடைப்பு போராட்டத்திற்கு ஆதரவு கோரி தமிழ்த் தேசிய கட்சிகளின் தலைவர்களும் ஆதரவாளர்களும் யாழில் முக் கிய வர்த்தக நகரங்களான திருநெல்வேலி, மருதனார் மடம் ஆகிய பகுதிகளில் பிரச் சார நடவடிக்கையில் ஈடுபட்ட னர்.


முல்லை நீதிபதிக்கு அச்சு றுத்தல் விடுத்தமைக்கும், மட்ட க்களப்பு பண்ணையாளர்க ளின் மேய்ச்சல் தரைகள் அபக ரிக்கப்படுவதை கண்டித்தும் தமிழ்த் தேசியக் கட்சிகளின் அழைப்பில் வடக்கு-கிழக்கு முழுவதும் நாளை முன்னெ டுக்கவுள்ள கடையடைப்பு



போராட்டத்திற்கு ஆதரவுகோரி குறித்த பிரச்சாரம் இடம்பெற்றது.

இதில் இலங்கைத் தமிழ ரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா, பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், ஈ.பி.ஆர்.எல்.எப் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன், முன்னாள் வடமாகாண கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன், வட க்கு மாகாண சந்தை வியா பாரிகள் ஒன்றியத் தலைவர் சி.முகுந்தன் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண் டனர். (நி-5-6-33-104)

# ஹர்த்தாலை எதிர்த்து
## துண்டுப்பிரசுரம் வழங்கி வைப்பு



(சாவகச்சேரி)
தமிழ் அரசியல் கட்சிகளால் வடக்கு-கிழக்கு மாகாண ங்களை மையமாக கொண்டு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஹர்த் தாலால் ஏற்படவுள்ள பாதிப்பு க்களை சுட்டிக்காட்டி சாவகச் சேரி மற்றும் கொடிகாமம் பகுதி களில் தென்மராட்சி மக்கள் உரிமை பாதுகாப்பு அமைப்பு துண்டுப்பிரசுரம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

குறித்த துண்டுப்பிரசுரத்தில் இலங்கையில் தற்போதுள்ள பொருளாதார நெருக்கடி நிலை யில் வடக்கு-கிழக்கு மாகா ணங்களை முடக்குவதால் பாதிக்கப்படப்போவது யார்?,

"இந்த ஹர்த்தால் மூலம் தமிழ் மக்களுக்கு கிடைக்கப் போகும் தீர்வு என்ன?

காலங்காலமாக முன்னெடு க்கப்பட்ட ஹர்த்தாலால் தமிழ் மக்கள் அடைந்த இலாபம் என்ன?

தெற்கை முடக்கினால் வரவேற்கத்தக்கது. ஆனால் வடக்கு,கிழக்கை முடக்கி பாதி ப்புள்ளாக்கும் வகையில் செயற்படுவதனை ஏற்க முடி யாது.

நாட்டில் தொடரும் வங்கு ரோத்து நிலையில் வியாபாரி கள் வியாபாரம் இல்லாது அல் லாடி வரும் நிலையில் இவ் வாறான கடையடைப்பின் மூலம் கிடைக்கப்போகும் நன்மை என்ன?

ஒன்றுசேர முடியாத தமிழ் கட்சிகள் தமிழ் மக்களின் அபிலாசைகளை எப்போது நிறைவேற்றுவார்கள்?அரசியல் நாடகமாடும் செயற்பாட்டால் மக்களுக்கு எதுவும் கிடை க்கப்போவதில்லை போன்றன துண்டுப்பிரசுரத்தில் குறிப்பிட ப்பட்டுள்ளது.(நி-5-6-30-104)

# கட்டாக்காலி மாடுகளை பிடித்த பிரதேச சபை
## தண்டப் பணம் செலுத்தி பெற்றுக் கொள்ளுமாறு அறிவிப்பு



(குருமன்காடு)
வவுனியாவில் கட்டாக்காலி மாடுகள் பிடிக்கப்பட்டுள்ளதாக வும் தண்டப்பணம் செலுத்தி அவற்றை பெற்றுக் கொள் ளுமாறும் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபைச் செய லாளர் தெரிவித்துள்ளார்.

இரவு வேளைகளில் வீதி விபத்துக்கள் ஏற்படும் வகை யில் நெளுக்குளம் மற்றும் மன்னார் வீதி பகுதியில் நடமாடிய மாடுகளே வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையால் பிடிக்கப்பட்டுள்ளன.

பிடிக்கப்பட்ட மாடுகளை உரி மையாளர்கள் அதற்குரிய தண்டப் பணத்தை செலுத்தி உடனடியாக மீள கொண்டு செல்லுமாறும் அவ்வாறு பெறப்படாத மாடுகள், ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என வும் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் செயலாளர் தெரிவித்துள்ளார். (5-6)



கிளிநொச்சி ஸ்கந்த புரம் நீர்ப்பாசன திட்டம் சூரிய மின்கலத்தின் மூலம் செயற்படும் நடவடிக்கை நேற்று ஆரம்பித்து வைக்க ப்பட்டது.
(படம்-தேவானந்தன்)

# தனியார் வர்த்தக ஊழியர்
## சங்கமும் கதவடைப்புக்கு ஆதரவு

(யாழ்ப்பாணம்)
வடக்கு-கிழக்கு தழுவிய நிலையில் நாளை முன்னெ டுக்கவுள்ள பொது முடக்கம் மற்றும் ஹர்த்தாலுக்கு ஆதரவு அளிப்பதான வட மாகாண தனி யார் வர்த்தகர்கள் ஊழியர்சங்கம் அறிவித்துள்ளது.

வடக்கு- கிழக்கு மாகாண ங்களின் சகல வர்த்தக நிலை யங்களையும் பூட்டி போக்கு வரத்தை நிறுத்தியும் இந்த போராட்டத்திற்கு ஆதரவளிக் குமாறு சகல வர்த்தகர்களையும் ஏனைய அனைத்து தொழி ற்சங்கங்களையும் பொது மக்க ளையும் வேண்டி நிற்பதாக வட மாகாண தனியார் வர்த்தக ஊழியர் சங்கம் அறிவித் துள்ளது. (நி-5-6)





பலாலி சர்வதேச விமான நிலையம் மீள திறக்கப்பட்டு நான்காவது வருட பூர்த்தியை முன்னிட்டு நேற்றுமுன்தினம் பலாலி சர்வதேச விமான நிலையவளாகத்தில் விசேட நிகழ்வுகள் இடம்பெற்றது.
(படம்- சிவசாந்தன்)

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)
இலங்கை திறந்த பல் கலைக்கழகத்தின் யாழ். பிராந்திய நிலையத்தால் நடத்தப்படும் மனிதவள முகாமைத்துவ உயர் சான் றிதழ் கற்கைநெறிகான விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன.

க.பொ.த சாதாரண தரத்தில் 6 பாடத்தில் சித்தி யடைந்த அனைவரும் விண்ணப்பிக்க முடியும். அத்துடன் இக் கற் கைநெறி யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் கற்கை நிலைய த்திலும் இடம்பெறும்.

விண்ணப்பிக்க விரும்பு பவர்கள் எதிர்வரும் 14.11. 2023 க்கு முன்னர் www. ou.ac.lk எனும் இணைய த்தளத்தில் படிவத்தை பூர் த்தி செய்து விண்ணப்பிக்க முடியும்.

மேலதிக தகவல்களைப் பெற விரும்புபவர்கள் யாழ். பிராந்திய நிலையத்தின் தொலைபேசி இலக்கமான 021 222 3374 எண்ணுக் குத் தொடர்பு கொள்ள முடி யும் என பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறி வித்துள்ளார். (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரி நகராட்சி மன்றம் பொன் விழா மண்டப கேள்வி அறிவித்தல் - 2024

தலைவர், பெறுகைக் குழு, சாவகச்சேரி நகராட்சி மன்றத்தினால் பின்வரும் சேவைகளுக்காக 01.01.2024 தொடக்கம் 31.12.2024 வரையான காலப்பகுதிக்கு முத்திரையிடப்பட்ட கூறுவிலைகள் பொருத்தமான வழங்குநர்களிடமிருந்து கோரப்படுகின்றது.

பெறுகையின் பெயர், இல:-

1. பொன்விழா மண்டப நிகழ்வுகளிற்கு உணவு வழங்குநரை தெரிவு செய்தல் - **NP/14/41(3)/Town Hall/Food Supply/2024**
2. பொன்விழா மண்டப நிகழ்வுகளிற்கு இரண்டு கதலி வாழைக்குலைகளை மரத்துடன் கொண்டுவந்து கட்டுவதற்கான வழங்குநரை தெரிவு செய்தல் - **NP/14/41(3)/Town Hall/Banana/2024**

பெறுகை இல **(01) NP/14/41(3)/Town Hall/Food Supply/2024**
பொன்விழா மண்டப நிகழ்வுகளிற்கு உணவு வழங்குநரை தெரிவு செய்தல்.

நிபந்தனைகள் :-

1. உணவு வழங்குனர் வியாபாரப்பதிவு செய்திருப்பதுடன் வியாபார உரிமம் பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் சமையல் செய்து வழங்கும் பகுதியானது நகராட்சி மன்ற எல்லைக்குள் காணப்படல் வேண்டும்.
2. தாங்கள் உணவு தயாரிக்கும் மற்றும் களஞ்சியப்படுத்தும் இடத்தினை எமது பொது சுகாதார பரிசோதகர் அல்லது எம்மால் அனுமதியளிக்கப்படுகின்ற உத்தியோகத்தர் பார்வையிடுவதற்கு அனுமதியளிக்க வேண்டும்.
3. சமையல் செய்யும் பகுதி மற்றும் சமையல் மேற்கொள்பவர்கள் சுத்தமாக இருப்பதுடன் சமையல் மேற்கொள்பவர்கள் மருத்துவ சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.
4. தங்களால் வழங்கப்படும் உணவு வகைகள் அனைத்தும் நகராட்சி மன்ற பொதுச் சுகாதார பரிசோதகரின் பரிசோதனைக்கு உட்படுத்தப்படும்.
5. தங்களால் தயாரிக்கப்படும் உணவு வகைகள் தொடர்ச்சியாக எப்போதும் சுவைமிக்கதாகவும் தரமுள்ளதாகவும் இருத்தல் வேண்டும்.
6. எங்கள் பணிப்பிற்கிணங்க எந்த உணவு வகைகளும் வழங்கக் கூடியதாக இருத்தல் வேண்டும்.
7. உரிய நேரத்திற்கு உணவு வகைகள் யாவும் தயாரித்து வழங்குதல் வேண்டும்.
8. தொழிற் தகைமை மற்றும் அனுபவச்சான்றிதழ்கள் இணைக்கப்படல் வேண்டும்.
9. தங்களுக்கு எமது மன்றத்தினால் வழங்கப்படும் உணவுக்கான கொடுப்பனவுத் தொகையிலிருந்து 12.5% தரகுப் பணமாக எம்மால் அறவிடப்படும்.
10. தாங்கள் பொன்விழா மண்டப நிகழ்வுகளுக்காக உணவு வழங்குதல் தொடர்பாக நகராட்சி மன்றத்தினூடாக மட்டுமே தொடர்புகளை மேற்கொள்வதுடன் எம்மால் குறிப்பிடப்படும் உணவு வகைகள் மற்றும் அளவுகள் மட்டுமே விநியோகம் செய்தல் வேண்டும்.

பெறுகை இல **(02) NP/14/41(3)/Town Hall/Banana /2024**
பொன்விழா மண்டப நிகழ்வுகளிற்கு இரண்டு கதலி வாழைக்குலைகளை மரத்துடன் கொண்டுவந்து கட்டுவதற்கான வழங்குநரை தெரிவு செய்தல்

நிபந்தனைகள்:-

1. எங்கள் பணிப்பிற்கிணங்க எந்த தினத்திலும் சேவை வழங்கக் கூடியதாக இருத்தல் வேண்டும்.
2. உரிய நிகழ்வன்று அதிகாலை 06:00 மணிக்கு முன்னதாக அல்லது குறிப்பிடப்படும் நேரத்தில் மரத்துடன் கூடிய இரண்டு கதலி வாழைக்குலை கட்டப்படுதல் வேண்டும்.
3. வாழைக்குலைகள் 25Kg - 30Kg எடை கொண்டதாகவும் பழுமாகவும் இருத்தல் வேண்டும்.
4. தங்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவுத்தொகையிலிருந்து 12.5% தரகுப் பணமாக எம்மால் அறவிடப்படும்.

குறிப்பு:-

1. சாவகச்சேரி நகராட்சி மன்றத்தினால் வழங்கப்படும் கேள்வி பத்திரங்களை மாத்திரம் சமர்ப்பித்தல் வேண்டும்.
2. கூறுவிலைப் பத்திரங்களை 19.10.2023 ஆம் திகதி மு.ப 9:30 இலிருந்து 01.11.2023 திகதி பி.ப 2:30 மணி வரை மீளளிக்கப்படாத வைப்புப் பணம் ரூ2,000.00 இனைச் செலுத்தி அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் நகராட்சி மன்றத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.
3. கூறுவிலைகள் 02.11.2023 பி.ப 2.30 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக "செயலாளர், நகராட்சி மன்றம், சாவகச்சேரி" எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பலாம். அல்லது அதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கூறுவிலைப் பெட்டியில் இடப்படுதல் வேண்டும்.
4. கூறுவிலை உள்ளடங்கிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பெறுகை இலக்கம் எழுதப்படல் வேண்டும்.
5. கூறுவிலைகள் 02.11.2023 பி.ப 2.30 மணிக்குத் திறக்கப்படும். அத்தருணம் வழங்குநரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.
6. தெரிவு செய்யப்படும் வழங்குநர்கள் சபையுடன் உடன்படிக்கை ஒன்றை மேற்கொள்ள வேண்டும்.
7. கேள்வி தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்கும் உரிமை நகராட்சி மன்ற பெறுகைக்குழுவுக்கே உரியது.
8. மேலதிக விவரங்களுக்கு நேரடியாகவோ அல்லது தொ.பே.இலக்கம் 021-227 0963 மூலமோ தொடர்பு கொள்ளவும்.

**அ.சீராளன், செயலாளர்,**
**நகராட்சி மன்றம்,**
**சாவகச்சேரி.**
**18.10.2023** (7447)


# மின் கட்டணத்தை 10 வீதத்தால் அதிகரிக்க அனுமதி வழங்குமாறு மின்சார சபை கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் எதிர்வரும் இரண்டு வருடங்களுக்கு மின்சார கட்டணத்தை 10 வீதத்தால் அதிகரிக்க வேண்டிய தேவை இருப்பதாக இலங்கை மின்சார சபை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் தெரிவித்துள்ளது.

ஒக்டோபர் மாதம் முதல் டிசெம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் எதிர்பார்க்கப்படும் வருமானம் மற்றும் செலவீனங்களுக்கு இடையிலான இடைவெளியை நிர்வகிப்பதற்கு இந்தக் கட்டணங்களை அதிகரிக்க வேண்டியது அவசியமானது என மின்சார சபை சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை மின்சாரக் கட்டணத்தை 22 வீதத்தால் அதிகரிப்பதற்கு இலங்கை மின்சாரசபை சமர்ப்பித்த தரவுகளில் முரண்பாடுகள் காணப்படுவதன் காரணமாக மின் கட்டணத்தை மீளக் கணக்கிடுமாறு பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழு அண்மையில் இலங்கை மின்சார சபைக்கு எழுத்து மூலம் அறிவித்திருந்தது.

இதன்படி இலங்கை மின்சார சபையின் பொது முகாமையாளர் பதில் கடிதமொன்றை அனுப்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# இணைய பாதுகாப்பு சட்டமூலத்தில் திருத்தம் - அரசாங்கம் தீர்மானம்

(கொழும்பு)

இணைய பாதுகாப்பு சட்டமூலத்தில் சில திருத்தங்களை மேற்கொள்ள அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக சட்டமா அதிபர் நேற்று உயர் நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளார்.

இணைய பாதுகாப்பு சட்ட மூலத்தின் அரசியலமைப்புச் சட்டத்தை சவாலுக்கு உட்படுத்தி தாக்கல் செய்யப்பட்ட விசேட தீர்மான மனுக்கள் மூவரடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

இதன்போதே சட்டமா அதிபர் சார்பாக மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் விராஜ் தயாரத்ன மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (நி-5-6)

# லெபனானில் இடிந்து விழுந்த கட்டடம் இலங்கையர் காயம்



(லெபனான்)

லெபனானில் பெரூப் நகருக்கு அருகில் 4 மாடிக் கட்டடமொன்று நேற்று முன்தினம் திடீரென இடிந்து வீழ்ந்ததில் இலங்கைப் பெண் ஒருவர் காயமடைந்துள்ளார் என வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் தெரிவித் துள்ளது.

கம்பஹா, மிரிஸ் வத்தை பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவரே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (நி-5-6)


# சாவகச்சேரி நகராட்சி மன்றம்

**வரவு செலவுத் திட்டம் - 2024**

1979 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட நகரசபை கட்டளைச் சட்டத்தின் 1939 ஆம் ஆண்டின் 255 ஆம் அத்தியாயமான 178 (3) ஆம் பிரிவின் பிரகாரம் 2024 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்படவுள்ள நிகழ்ச்சித்திட்ட வரவுசெலவுத் திட்டத்திற்கான அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பான முன்மொழிவுகளை நகராட்சி மன்ற எல்லைக்குட்பட்ட பிரஜைகளினால் 2023.10.27 ஆம் திகதிக்கு முன்னர் நகராட்சி மன்ற அலுவலகத்தில் சமர்ப்பிக்கலாம் என்பதனை தெரிவித்துக்கொள்கின்றேன்.

**நகராட்சிமன்ற அலுவலகம்,**
**சாகவச்சேரி,**
**2023.10.18.** (C- 7445)

**செயலாளர்,**
**நகராட்சி மன்றம் சாவகச்சேரி.**

# மணிவிழா வாழ்த்து



**திருமதி**
**துகிர்தா சச்சிதானந்தம்**

**சேவை விபரம்**

யா/நீர்வேலி றோ.க.த.க பாடசாலை – ஆசிரியர்
1990.03.28-2004.01.31
யா/நீர்வேலி சீ.சீ.த.க. பாடசாலை – ஆசிரியர்
2004.02.10-2015.02.15
யா/புத்தூர் மெ.மி.த.க பாடசாலை – பிரதி அதிபர்
2015.02.16-2023.10.18

எமது பாடசாலையில் சேவையாற்றி ஓய்வு பெற்ற மணிவிழா நாயகியை வாழ்த்துவதில் மகிழ்வடைகின்றோம்.

வாழ்த்துவோர்- ஆசிரியர் நலன்புரிக் கழகம் யா/புத்தூர் மெ.மி.த.க. பாடசாலை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதம்

# இஸ்ரேல்-ஹமாஸ் தாக்குதலில் 31 அமெரிக்கர்கள் உயிரிழப்பு



(வோஷிங்டன்)

இஸ்ரேல் மீது ஹமாஸ் அமைப்பு நடத்திய திடீர் தாக்குதலில் கொல்லப்பட்ட அமெரிக்கர்களின் எண்ணிக்கை உயர்வடைந்துள்ளதாக வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது.

இதன்படி உயிரிழந்த அமெரிக்கர்களின் எண்ணிக்கை 31 ஆக உயர்ந்துள்ளதாகவும் இன்னும் 13 அமெரிக்கர்களை காணவில்லை எனவும் வெள்ளை மாளிகையின் செய்தித் தொடர்பாளர் ஜோன் கிர்பி நேற்று முன்தினம் தெரிவித்தார். (நி-5-6)

# கனடா விமானத்தை இடைமறித்த சீன விமானம்

## கண்டித்தது கனடா

(ஒட்டாவா)

சுற்றுக்காவல் பணியில் ஈடுபட்டிருந்த கனடா விமானத்தைச் சீனா ஆபத்தான முறையில் இடைமறித்ததைக் கனடா கண்டித்துள்ளது. சீனாவின் கரை ஓரத்துக்கு அப்பால் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கனடாவின் விமானத்தை சீனப் போர்விமானம் சில மணி நேரம் பின்தொடர்ந்து ஒரு கட்டத்தில் 5 மீற்றர் வரை நெருக்கமாக வந்ததாகக் கூறப்படுகிறது.

வட கொரியாவுக்கு எதிரான ஐக்கிய நாட்டுத்தடையை நடைமுறைப்படுத்தும் நடவடிக்கையில் கனேடிய விமானம் ஈடுபட்டிருந்தது.

அதேவேளை கனடாவின் தேர்தலில் சீனா குறுக்கிட்டதாகக்கூறி மே மாதம் சீன அரசதந்திரியைக் கனடா வெளியேற்றிய நிலையில், கனடாவுக்கும் சீனாவுக்கும் இடையே உறவு மோசமாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)



# பிணவறைகளாக மாறும் ஐஸ்கிறீம் வண்டிகள்



(காசா)

பாலஸ்தீனத்தில் போரினால் உயிரிழந்தவர்களின் உடல்கள் ஐஸ்கிறீம் வண்டிகளில் பாதுகாக்கப்பட்டு வருகின்றமை உலகளவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனத்துக்கும் இடையே இடம்பெற்றுவரும் போரானது நாளுக்கு நாள் தீவிரமடைந்து வருகின்றது.

இந்நிலையில் காசாவை ஏற்கனவே தனது கட்டுப்பாட்டில் கொண்டுள்ள இஸ்ரேல், அப்பகுதியில் வான்வழித் தாக்குதல் நடத்தி வருகின்றது.

இந்நிலையில், இஸ்ரேலின் தாக்குதலினால் இதுவரை 2,600 இற்கும் மேற்பட்ட பாலஸ்தீனியர்கள் உயிரிழந்துள்ளனர் எனவும் லட்சக்கணக்கானவர்கள் காயமடைந்துள்ளனர் எனவும், இதனால் அங்குள்ள மருத்துவமனை நோயாளர்களால் நிரம்பிக்காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மருத்துவமனைகளில் உள்ள பிணவறைகள் நிரம்பியுள்ளதால் ஐஸ்கிறீம் வண்டிகளை தாம் பிணவறைகளாக மாற்றி வருவதாகவும் மருத்துவர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (நி-5-6)

# சீனாவின் கனவுத்திட்டத்தினை பாராட்டிய ரஷ்ய ஜனாதிபதி

(பீஜிங்)

சீனாவின் கனவுத் திட்டமான 'புதிய பட்டுப் பாதை திட்டம்' குறித்து ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தனது பாராட்டினை தெரி வித்துள்ளார்.

உலக நாடுகள் இடையே வர்த்தகத் துறையினை மேம்படுத்தும் வகையில் முன்னெடுக்கப்பட்ட குறித்த திட்டமானது, ஆரம்பிக்கப்பட்டு பத்து ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில் இதனைக் கொண்டாடும் விதமாக ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் உள்ளிட்ட பல நாடுகளின் தலைவர்களும் பீஜிங்கில் நடைபெற்ற உச்சி மாநாட்டில் பங்கேற்றனர்.

அந்தவகையில் குறித்த நிகழ்வுக்கு தாம் அழைக்கப்பட்டமைக்கு நன்றி தெரிவித்த புடின் சீனாவுக்கு, ரஷ்யா தனது முழுமையான ஆதரவை வழங்கும் எனவும் அத்துடன் இத் திட்டத்தின் மூலம் கிழக்கு மற்றும் மேற்கு நாடுகளிடையான வர்த்தகத்தை ஆழப்படுத்த முடியும் என வும் தெரிவித்தார்.

உக்ரைன் மற்றும் ரஷ்யா இடையே இடம்பெற்று வரும் போர் காரணமாக நாட்டை விட்டு வெளியே றாமல் இருந்த புடின், சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங்கின் அழைப்பின் பேரில் குறித்த மாநாட்டில் முதன் முறை யாகப் பங்கேற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## 13 சீன நிறுவனங்களுக்கு தடை விதிப்பு

(வோஷிங்டன்)

சீனா, ரஷ்யா மீது ஏராளமான பொருளாதார தடைகளை அமெரிக்கா விதித்துள்ளது.

இந்நிலையில், 13 சீன நிறுவனங்களுக்கு ஏற்றுமதி தடைகளை விதித்து அமெரிக்க வர்த்தகத்துறை நேற்று முன்தினம் உத்தர விட்டுள்ளது.

அமெரிக்காவின் தேசிய நலன் மற்றும் வெளியுறவுத் துறை கொள்கைக்கு எதிரான செயற்பாடுகளை கொண்டிருப்பதாக கூறி இந்த நிறுவனங்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. (நி-5-6)

# காசா மரு

# சுமா

## தாக்குத

(காசா)

காசாவில் அல்
தாக்குதல் இட
இற்கும் மேற்ப
இந்தத் தாக்கு
மற்றும் துருக்கி
வெடித்துள்ளன



# வறண்டது அ
# உயிரிழக்கும் ெ



(வோஷிங்டன்)

தென் அமெரிக்காவில் உள்ள உலகின் மிகப்பெரிய நதியான அமேசான் நதி வரலாறு காணாத அளவில் வறட்சியடைந்துள்ளதால் 100 இற்கும் அதிகமான டொல்பின்கள் இறந்து கிடப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமேசான் நதியில் நீர்மட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ருத்துவமனை மீது குண்டுத்தாக்குதல்

# ...ர் 500 பேர் உயிரிழப்பு

## ...தலை கண்டித்து வெடித்தது போராட்டம்

**...அல்-அஹ்லி மருத்துவமனை மீது விமானப்படைத் ...இடம்பெற்றுள்ளது. குறித்த தாக்குதலில் 500 ...ற்பட்ட பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளனர். ...க்குதலைக் கண்டித்து லெபனான்-ஜோர்தான் ...க்கி ஆகிய மத்திய கிழக்கு நாடுகளில் போராட்டம் ...ன.**





இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனத்திற்கும் இடையில் போர் தொடர்ந்து நடைபெற்று வரும் நிலையில் காசா பகுதியில் உள்ள மருத்துவமனை மீது விமானப்படைத்தாக்குதல் இடம் பெற்றுள்ளது.

இஸ்ரேலிய விமானத் தாக்குதல் காரணமாகவே இந்த உயிரிழப்புகள் இடம் பெற்றன என ஹமாஸ் குற்றம்சாட்டியுள்ளது. அதே வேளை பாலஸ்தீனிய ஜிகாத் அமைப்பின் ரொக்கட் தாக்குதலே இதற்கு காரணம் என இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

காசா மருத்துவமனை மீதான குண்டுவீச்சு தாக்குதலைக் கண்டித்து மத்திய கிழக்கு நாடுகளில் போராட்டம் வெடித்துள்ள நிலையில் லைபனானின் ஈரான் ஆதரவுடைய ஹெஸ்புல்லா அமைப்பு, அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் இஸ்ரேல் பயணத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டத்துக்கு அழைப்பு விடுத்தது.

ஹெஸ்புல்லாவின் அழைப்பைத் தொடர்ந்து, நூற்றுக் கணக்கான ஆர்ப்பாட்டக் காரர்கள் பெய்ரூட்டுக்கு வெளியே, அவ்கார் புறநகரில் உள்ள அமெரிக்க தூதரகத்திற்கு வெளியே கூடிய நிலையில் பாதுகாப்புப் படையினருடன் மோதல் ஏற்பட்டுள்ளது.

அங்கு எதிர்ப்பாளர்கள் கற்களை எறிந்து அருகிலுள்ள கட்டிடத்திற்கு தீ வைத்துள்ளதாக ஏஜென்ஸ் பிரான்ஸ்-பிரஸ் தெரிவித்துள்ளது.

இதேவேளை ஈரானின் தலைநகர் டெஹ்ரானில் நேற்று அதிகாலையில் நூற்றுக்கணக்கான ஆர்ப்பாட்டக்காரர்கள் பிரித்தானியா மற்றும் பிரான்ஸ் தூதரகங்களுக்கு வெளியே கூடினர்.

"பிரான்ஸுக்கும் இங்கிலாந்துக்கும் மரணம்" என்று ஈரான் தலைநகரில் உள்ள பிரான்ஸ் தூதரக வளாகத்தின் சுவர்களில் முட்டைகளை வீசி எதிர்ப்பாளர்கள் கூச்சலிட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## ...மேசான் நதி ...டொல்பின்கள்



குறைந்ததன் காரணமாக அதன் கிளை நதிகளிலும் நீர் குறைவடைந்துள்ளது.

பிரேசிலில் மனாசில் 17.60 மீற்றராக இருந்த நீர் மட்டத்தின் அளவு தற்போது 13.59 அளவில் குறைந்துள்ள நிலையில் பிரேசில் 100 ஆண்டுகளில் இல்லாத வரலாறு காணாத வறட்சி நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

உலகளாவிய வெப்ப நிலை உயர்வாலும் பருவ நிலை மாற்ற பிரச்சினைகளாலும் இந்த வறட்சி உருவாகியுள்ளதாக கூறப்படுகிறது.

மேலும் பிரேசிலில் கடந்த 6 மாதங்களாக மழை பெய்யவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. வெப்பம் அதிகரித்ததன் காரணமாகவே டொல்பின்கள் இறந்து உள்ளன.

மக்களுக்கு அத்தியாவசிய தேவைகள் மட்டுமன்றி மாசடைந்த நீரை பருகுவதால் சுகாதார ரீதியிலான பிரச்சினைகளும் ஏற்பட தொடங்கியுள்ளது.

உலக வெப்பமயமாதலை தடுக்காவிட்டால் இந்த பாதிப்புகளை உலகம் எதிர் நோக்க தயாராக வேண்டுமென அறிவியலாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (நி-5-6)

# காசாவில் ஆபத்தான நிலையில் 84,000 கர்ப்பிணிப்பெண்கள்!

## உலக சுகாதார ஸ்தாபனம்



(காசா)

ரபா எல்லையில் காசாவிற்கான மனிதாபிமான உதவிப் பொருட்கள் சிக்குண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் காசாவின் 84,000 கர்ப்பிணிபெண்கள் ஆபத்தான நிலையை எதிர் கொள்கின்றனர் என உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

ரபா எல்லையின் எகிப்திய பக்கத்தில் மூன்று இலட்சம் மக்களிற்கு போதுமான அடிப்படை பொருட்கள் சிக்குண்ட நிலையில் உள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனத்தின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

மேலும் அத் தரைவழிப் பாதையை திறப்பது தொடர்பில் உலக சுகாதார ஸ்தாபனம் எகிப்துடன் இணக்கப்பாட்டிற்கு வந்த போதிலும் இஸ்ரேலின் விமானக் குண்டு வீச்சுக்கள் அதனை சாத்தியமற்றதாக்கியுள்ளன. (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாங்குள புகையிரத சேவையினை விஸ்தரித்தால் முல்லைத்தீவு மக்கள் பயன்பெறுவார்கள்

## முல்லை. மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்

(நெளுக்குளம்)

மாங்குளம் புகையிரத சேவையை விஸ்தரித்தால் முல்லை.மாவட்ட மக்கள் நன்மையடைவார்கள் என முல்லைத் தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (நிர்வாகம்) க.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

பயணிகளின் நலன் கருதி மாங்குளம் புகையிரத நிலையத்தில் நூலகம் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதிகள் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலே இவ்வாறு தெரிவித்தார்.

மாங்குளம் புகையிரத நிலைய சேவைகளை விஸ்தரிக்க வேண்டும். முல்லை. மாவட்ட மக்கள் ஆசன ஒதுக்கீட்டை முற்பதிவு செய்ய வேண்டுமாக இருந்தால் கிளிநொச்சிக்கு அல்லது வவுனியாவிற்கு சென்றே பதிவினை மேற்கொள்கிறார்கள். அவ் வசதி மாங்குளத்தில் அமைய பெறுமிடத்து மாவட்ட மக்களுக்கு அது அனுகூலமாக அமையும்.

அதிவிரைவு புகையிரதத்தை மாங்குளத்தில் நிறுத்துவதற்கான முயற்சிகளை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்திலும் தீர்மானமாக எடுத்து கொழும்பிலுள்ள புகையிரத அதிபர்களுக்கும், ஜனாதிபதி செயலகத்திற்கும், வன்னி பாராளுமன்ற உறுப்பினர்கள் ஊடாகவும் அவ்விடயம் கொண்டு செல்லப்பட்டுள்ளது. அவ்விரு சேவைகளும் மாங்குளம் புகையிரத நிலையத்திற்கு கிடைக்குமிடத்து முல்லைத்தீவு மாவட்ட மக்கள் இன்னும் பெரிதும் நன்மையடைவார்கள் என தெரிவித்தார். (நி-5-6-299)

# மோ.சைக்கிளில் மறைத்து வைக்கப்பட்ட கஞ்சா பொதி மீட்பு

(முறிகண்டி)

விசேட அதிரடிப்படை மற்றும் இராணுவத்தினரும் இணைந்து மேற்கொண்ட சோதனையின்போது 5 கிலோக்கு அதிக எடையுள்ள கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்றுள்ளது. இராணுவ புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலிற்கு அமைவாக கிளிநொச்சி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கணேசபுரம் நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளில் மறைத்து எடுத்து செல்லப்பட்ட கஞ்சாவுடன் பயன்பாடு அற்ற காணிக்குள் சந்தேக நபர் சென்றுள்ளார்.

குறித்த மோட்டார் சைக்கிளை பின்தொடர்ந்து சென்ற விசேட அதிரடிப்படையினரும், இராணுவத்தினரும் சோதனையிட்ட வேளை மறைத்து வைக்கப்பட்ட கஞ்சா பொதிகள் மீட்கப்பட்டதுடன், சந்தேகநபர் ஒருவரையும் கைது செய்து கிளிநொச்சி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (நி-5-6-100)

## செயற்பட்டு மகிழ்வோம்

(யாழ்ப்பாணம்)

ஓட்டுமடத்தைச் சேர்ந்த அமரர்களான ச.நடராசா. ந.இரத்தினம் ஆகியோரின் ஞாபகார்த்தமாக குடும்ப உறவுகளின் அனுசரணையுடன் ஆறுகால்மடம் அறிவொளி சனசமூக நிலையத்தின் கீழ் இயங்கும் அறிவொளி முன்பள்ளி சிறார்களின் செயற்பட்டு மகிழ்வோம் விழாவானது எதிர்வரும் 21 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்.வண் ஸ்ரீவைத்திலிங்கம் வித்தியாலமைதானத்தில் அறிவொளி சனசமூக நிலையத் தலைவர் க.தம்பிராசா தலைமையில் இடம்பெறும். இவ் நிகழ்வில் பிரதம விருந்தினராக சமூக சேவைகள் திணைக்களத்தின் ஓய்வு பெற்ற அத்தியட்சகர் வி.சிவனேசன் கலந்து கொள்ளவுள்ளார். (5-6)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 300 | 200 | 250 |
| உருளைக்கிழங்கு | 220 | 220 | 240 | 240 |
| பச்சைமிளகாய் | 350 | 400 | 400 | 350 |
| தக்காளி | 250 | 300 | 250 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 140 | 160 | 150 | 140 |
| கோவா | 180 | 180 | 150 | 200 |
| கரட் | 260 | 240 | 280 | 300 |
| பூசணி | 80 | 70 | 70 | 100 |
| புடோல் | 100 | 160 | 120 | 250 |
| வாழைக்காய் | 200 | 180 | 160 | 300 |
| சின்ன வெங்காயம் | 380 | 350 | 300 | 400 |
| பெரிய வெங்காயம் | 260 | 220 | 250 | 300 |
| பாகற்காய் | 450 | 400 | 400 | 400 |
| வெண்டக்காய் | 120 | 200 | 150 | 250 |
| கருணைக் கிழங்கு | 100 | 140 | 150 | 160 |
| பயற்றங்காய் | 300 | 400 | 250 | 400 |
| லீக்ஸ் | 160 | 160 | 200 | 200 |
| பீற்றூட் | 140 | 140 | 140 | 160 |
| கறிமிளகாய் | 300 | 300 | 300 | 400 |
| முருங்கைக்காய் | 200 | 250 | 200 | 250 |
| போஞ்சி | 400 | 450 | 500 | 500 |
| கத்தரிதம்புள்ள | 220 | 150 | 160 | 220 |
| கீரை - 1 பிடி | 80 | 70 | 80 | 120 |
| தேசிக்காய் | 1200 | 1300 | 1200 | 2000 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 85 | 70 | 60-90 |
| இராசவள்ளி | 400 | 400 | 500 | 500 |
| வெங்காயப்பூ | 350 | 300 | 400 | 400 |
| முள்ளங்கி | 100 | 120 | 100 | 160 |
| பொன்னாங்காணி | 80 | 70 | 80 | 60 |
| வல்லாரை | 40 | 30 | 40 | 60 |
| ஈரப்பலா | 80 | 100 | 100 | 160 |

# facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2942

### குமரன்

அரை மணி நேரமா என்ன பண்ணியும் நிக்காத விக்கல்...



பொண்டாட்டி கிட்ட இருந்து போன் வந்தவுடனே நிக்குது..

### கமலி




### அகிலா

என்ன ஏதும் ஆக்சிடன்டா



இல்லை ஒரு பொண்ணோட ஸ்கூட்டி ஸ்டார்ட் ஆகலையாம்

### தரள்

மழைக்காலம் வந்திடுச்சிடுடா. டேய் இனிமே எல்லாரும் Raincoat போட்டுதான் வெளியே போகனும்



### ராஜி

நாம நேரான ரூட்ல போய்ட்டு இருக்கும்போது...



சந்துபொந்து காடு மேடெல்லாம் தரதரன்னு இழுத்துட்டுப் போகுது வாழ்க்கை...

### லட்சுமி




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பளையில் வீடொன்றின் மீது பெற்றோல் குண்டு வீச்சு தாக்குதல்



(முறிகண்டி)

கொலைக்குற்றச்சாட்டில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நபரின் வீடு தீக்கிரையாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் பளை பொலிஸார் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

கிளிநொச்சி பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட முகமாலை பகுதியில் உள்ள வீடு ஒன்றே நேற்றுமுன்தினம் இரவு இவ்வாறு தீக்கிரியாக்கப்பட்டுள்ளது.

குறித்த வீட்டில் வைத்து கடந்த மாதம் ஒருவர் கடுமையாக தாக்கப்பட்டு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்ட நிலையில் உயிரிழந்திருந்தார்.

இந்நிலையில்சம்பவம்தொடர்பில் நால்வர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர் ஒருவரது வீடே இவ்வாறு நேற்று முன்தினம் இரவு பெற்றோல் பயன்படுத்தப்பட்டு தீக்கிரையாக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. குறித்த சம்பவத்தின் பின்னர் அவ்வீட்டில் எவரும் இல்லை என்பதால் உயிராபத்து தவிர்க்கப்பட்டுள்ளது. ஆயினும், பெறுமதிமிக்க சொத்துக்கள் தீக்கிரையாகியுள்ளது. சம்பவம் தொடர்பில் குற்றத்தடுப்பு பிரிவினரின் உதவியுடன் பளை பொலிஸார் விசாரணைகளை விரிவுபடுத்தியுள்ளனர். (நி-5-6-315-100)

## வடக்கில் 9543 ஏக்கர் காணி படையினரால் அபகரிப்பு

### விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு சிறீதரன் எம்.பி கோரிக்கை



(கொழும்பு)


வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் 9543 ஏக்கர் காணிகள் இராணுவத்தினரால் அபகரிக்கப்பட்டுள்ள அரச மற்றும் தனியார் காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் முப்படைகள், பொலிஸார் மற்றும் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தினால் அபகரிக்கப்பட்டுள்ள காணிகள் தொடர்பில், பிரதேச செயலாளர் பிரிவு ரீதியாகத் திரட்ட முடிந்த தகவல்களைக் கொண்டு தன்னால் தயாரிக்கப்பட்ட விவரண அறிக்கையை சபாபீடத்திற்கு சமர்ப்பித்து நேற்று பாராளுமன்ற அமர்வில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கிளிநொச்சி மாவட்டத்தில் 4378.8 ஏக்கரும், யாழ்ப்பாண மாவட்டத்தில் 2433.79 ஏக்கரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 1578.27 ஏக்கரும், வவுனியா மாவட்டத்தில் 1021.55 ஏக்கரும், மன்னார் மாவட்டத்தில் 130.77 ஏக்கருமாக வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் 9543.18 ஏக்கர் காணிகள் படையினரால் அபகரிக்கப்பட்டுள்ளதாக அவரால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## பத்து மோட்டார் குண்டுகள் பூநகரி பகுதியில் மீட்பு



(பூநகரி)

பூநகரிபட்டம்கட்டைப்பகுதியில் உள்ள காட்டுப்பகுதியில் 10 மோட்டர் குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன. கிளிநொச்சி பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய குறித்தபகுதியில்இருந்து 60mm குண்டுகள் எட்டும், 4mm குண்டு ஒன்றும் மற்றும் கைக்குண்டு ஒன்றும் நேற்று நீதிமன்ற அனுமதியுடன் சிறப்பு அதிரடிப்படையினரால் செயலிழக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்துள்ளனர். (நி-5-6-316)

# ஐப்பசி மாத இராசி பலன்கள் 18.10.2023-16.11.2023

## மேஷம்

**தன்னம்பிக்கையோடு செயற்படும் மேஷ இராசி வாசகர்களே!**

ஐப்பசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது உங்கள் இராசியில் குரு பகவான் சஞ்சரிக்கின்றார். சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் உங்கள் இராசிநாதன் செவ்வாய் மீது அவரது பார்வை பதிகின்றது. எனவே "குரு மங்கள யோகம்" உருவாகின்றது. இல்லத்தில் சுபகாரியங்கள் நடைபெறும். சுகங்களும், சந்தோஷங்களும் அதிகரிக்கும்.

**சனி வக்கிர இயக்கம்!**

ஐப்பசி 6 ஆம் திகதி மகர இராசியில் சஞ்சரிக்கும் சனி, வக்கிர நிவர்த்தியாகின்றார். உங்கள் இராசிக்கு தொழில் மற்றும் லாப ஸ்தானத்திற்கு அதிபதியானவர் சனி. அவர் வக்கிர நிவர்த்தியாகி பலமடைவது யோகம்தான். எனவே இனி தொழில் வளம் சிறப்பாக இருக்கும். குறுக்கீடு சக்திகள் அகலும். கொடுக்கல்-வாங்கல்கள் சீராகும். புதிய தொழில் தொடங்கும் திட்டங்கள் நிறைவேறும். வருமானம் உயர வழிபிறக்கும். உத்தியோகத்தைப் பொறுத்தவரை உங்களுக்கு மேலிடத்து ஆதரவும், தலைமைப் பதவிகளும் தானாகக் கிடைக்கலாம். புதிய நிறுவனங்களில் இருந்து வரும் அழைப்புகளை ஏற்றுக் கொள்ள வேண்டியதில்லை. இருக்கும் நிறுவனமே உங்களது எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும். பெற்றோர்களின் உடல்நலத்தில் கவனம் தேவை.

**குரு வக்கிரம்!**

மாதம் முழுவதும் குரு பகவான் உங்கள் இராசியிலேயே வக்கிரம் பெற்று இருக்கின்றார். உங்கள் இராசிக்கு 9, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் குரு. அவர் வக்கிர நிலையில் இருக்கும் பொழுது தந்தை வழியில் சில பிரச்சினைகள் தலைதூக்கும். பெற்றோர்களின் ஆதரவு குறையும். ஆரோக்கியத் தொல்லையும், வெளிநாடு செல்லும் முயற்சிகளில் தடைகளும் ஏற்படலாம். வியாழன் விரதமும், குரு வழிபாடும் வெற்றிக்கு வித்திடும்.

**நீச்சம் பெறும் சுக்கிரன்!**

ஐப்பசி 16 ஆம் திகதி கன்னி இராசிக்கு சுக்கிரன் வருகின்றார். அங்கு அவர் வலிமை இழந்து நீச்சம் பெறுகின்றார். உங்கள் இராசிக்கு 2, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். அவர் நீச்சம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. தனாதிபதியாக விளங்கும் சுக்ரன் நீச்சம் பெறுவதால் பணப்புழக்கம் குறையும். புனிதப் பயணங்களால் விரயங்கள் ஏற்படும். கைகூடுவது போல் இருந்த கல்யாண முயற்சி கடைசி நேரத்தில் கைநழுவிச் செல்லலாம்.

**விருச்சிக புதன்!**

ஐப்பசி 14 ஆம் திகதி விருச்சிக இராசிக்கு புதன் வருகின்றார். உங்கள் இராசிக்கு 3, 6 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். 6 இற்கு அதிபதி 8 இல் வரும் பொழுது "விபரீத ராஜ யோகம்" செயற்படும். எனவே திட்டமிடாது செய்யும் காரியங்களில் வெற்றி கிடைக்கும். உங்கள் திறமைக்குரிய அங்கீகாரமும் கிடைக்கும். மற்றவர்கள் பாராட்டும் அளவிற்கு நல்ல காரியம் ஒன்றை செய்து முடிப்பீர்கள். இதுபோன்ற காலங்களில் பொருளாதார நிலை உயரும். புகழ்மிக்க ஆலயங்களுக்குச் சென்று வழிபட்டு வருவீர்கள்.

போட்டிகளுக்கு மத்தியில் பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு முன்னேற்றம் ஏற்படும். வியாபாரம் தொழில் செய்பவர்களுக்கு ஏற்றமும், இறக்கமும் கலந்த நிலை உருவாகும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு நல்ல வாய்ப்புகள் நாடி வரும். கலைஞர்களுக்கு புகழ் கூடும். மாணவ-மாணவிகளுக்கு கல்வி தொடர்பான பயணங்கள் உண்டு. பெண்களுக்கு குடும்பச்சுமை கூடும். விரயங்கள் வந்தாலும் அதைச் சமாளிக்கும் ஆற்றல் உண்டு.

## ரிஷபம்

**கொடுத்த பணியை ஒழுங்காகச் செய்து பாராட்டுப் பெறும் ரிஷப இராசி வாசர்களே!**

ஐப்பசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சுக்கிரன் குருவால் பார்க்கப்படுகின்றார். குரு பகை கிரகமாக இருந்து பார்த்தாலும் அது வக்கிர இயக்கத்தில் இருந்து பார்ப்பதால் நன்மைகள் அதிகம் கிடைக்கும். காரியங்கள் கடைசி நேரத்தில் கைகூடிவரும். கடமையைச் செவ்வனே செய்து பாராட்டுப் பெறுவீர்கள். பொருளாதார நிலை திருப்தி தரும். புதிய முயற்சிகளிலும் உங்களுக்கு வெற்றி கிடைக்கும். சென்ற மாதத்தைக் காட்டிலும் சிறப்பான மாதமாக இந்த மாதம் அமையப்போகின்றது.

**சனி வக்கிர நிவர்த்தி!**

ஐப்பசி 6 ஆம் திகதி மகர இராசியில் சஞ்சரிக்கும் சனி வக்கிர நிவர்த்தியாகின்றார். உங்கள் இராசிக்கு யோகம் செய்யும் கிரகம் சனி ஆவார். குறிப்பாக 9, 10 இற்கு அதிபதியானவர் சனி என்பதால் பாக்கிய ஸ்தானம் பலம் பெறுகின்றது. எனவே சகல வழிகளிலும் உங்களுக்கு நன்மை கிடைக்கும். தனித்தியங்கி வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள முன்வருவீர்கள். முன்னோர் சொத்துக்களில் முறையான பங்கீடுகள் கிடைக்கும். முக்கியப் புள்ளிகளின் ஆதரவோடு புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். உத்தியோகத்தில் உயர் அதிகாரிகள் இணக்கமாக நடந்துகொள்வர். கருத்து மோதல்கள் அகலும். கவலைகள் தீரும்.

**குரு வக்கிரம்!**

மாதம் முழுவதும் குரு பகவான் உங்கள் இராசிக்கு 12 ஆம் இடத்தில் வக்ரம் பெறுகின்றார். உங்கள் இராசிநாதன் சுக்கிரனுக்கு குருபகவான் பகை கிரகம் என்பதால் அவர் வக்கிரம் பெறுவது நன்மை தான். எதிர்பாராத சில நல்ல சம்பவங்கள் இல்லத்தில் நடைபெறலாம். புதிய திருப்பங்கள் பலவும் காண்பீர்கள். புகழ் மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாக இருந்து, செய்யும் தொழிலைச் சிறப்பாக நடைபெற வழி வகுத்துக்கொடுப்பர். வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சியில் வெற்றி கிடைக்கும்.

**நீச்சம் பெறும் சுக்கிரன்!**

ஐப்பசி 16 ஆம் திகதி கன்னி இராசிக்கு சுக்கிரன் வருகின்றார். அங்கு அவர் வலிமை பெறுகின்றார். உங்கள் இராசிநாதன் நீச்சம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. ஆரோக்கியத் தொல்லைகள் ஏற்படாதிருக்க ஆகாரத்தில் கட்டுப்பாடு செலுத்துங்கள். உறவினர் பகை உருவாகலாம். 6 இற்கு அதிபதியாகவும், சுக்கிரன் விளங்குவதால் உத்தியோகத்தைப் பொறுத்தவரை பாதிப்பு ஏற்படாது. உங்களுக்கு இடையூறு செய்தவர்கள் விலகுவர். மேலதிகாரிகள் மூலம் நல்ல தகவல் கிடைக்கும்.

**விருச்சிக புதன்!**

ஐப்பசி 17 ஆம் திகதி விருச்சிக இராசிக்குப் புதன் வருகின்றார். உங்கள் இராசிக்கு 2, 5 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் சப்தம ஸ்தானத்திற்கு வரும்பொழுது எல்லா வழிகளிலும் உங்களுக்கு நன்மைகள் கிடைக்கும். இல்லத்தில் நல்ல சம்பவங்கள் நடைபெறும். புதிய ஒப்பந்தங்கள் வந்து பொருளாதார நிலையை உயர்த்தும். குடும்ப உறுப்பினர்களில் ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் சம்பாதிக்கும் வாய்ப்பு உருவாகும். பிள்ளைகளின் திருமண வாய்ப்புகளைச் சிறப்பாக நடத்தி முடிப்பீர்கள்.

பொதுவாழ்வில் உள்ளவர்களுக்கு பொறுப்புகள் கூடுதலாக வந்து சேரும். தொழில், வியாபாரம் செய்பவர்களுக்கு ஒப்பந்தங்கள் வந்து மகிழ்ச்சியை உருவாக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். கலைஞர்கள் கௌரவிக்கப்படுவர். மாணவ-மாணவியர்களுக்கு படிப்பில் மேன்மை உண்டு. பெண்களுக்கு குடும்ப ஒற்றுமை பலப்படும். வீடு மாற்றங்கள் இனிமை தரும். வருமானம் திருப்தி அளிக்கும். வாரிசுகளின் எண்ணங்களை பூர்த்தி செய்வீர்கள்.

(தொடரும்...)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 312





அங்கே வந்து விவரமாகச் சொல்லு!" என்றார் அநிருத்தப் பிரமராயர்.

### பதின்மூன்றாம் அத்தியாயம் "பொன்னியின் செல்வன்"

வந்தியத்தேவன் நாகத்தீவின் முனையில் இறங்கி மாதோட்டத்தை நோக்கிப் போய்க்கொண்டிருந்த அதே சமயத்தில் - அநிருத்தப் பிரமராயரும் ஆழ்வார்க்கடியானும் சாம்ராஜ்ய நிலைமையைப்பற்றி விவாதித்துக் கொண்டிருந்த அதே நேரத்தில்-குந்தவை தேவியும் கொடும்பாளூர் இளவரசி வானதியும், அம்பாரி வைத்த ஆனைமீது ஏறித் தஞ்சை நகரை நெருங்கிக் கொண்டிருந்தார்கள்.

இளைய பிராட்டி சில காலமாகத் தஞ்சைக்குப் போவதில்லை என்று வைத்துக் கொண்டிருந்தாள். இதற்குப் பல காரணங்கள் இருந்தன. தஞ்சையில் அரண்மனைப் பெண்டிர் தனித்தனியாக வசிக்கும்படியாகப் போதிய அரண்மனைகள் இன்னும் உண்டாகவில்லை. சக்கரவர்த்தியின் பிரதான அரண்மனையிலேயே எல்லாப் பெண்டிரும் இருந்தாக வேண்டும். மற்ற அரண்மனைகளை யெல்லாம் பழுவேட்டரையர்களும் மற்றும் பெருந்தரத்து அரசாங்க அதிகாரிகளும் ஆக்ரமித்துக் கொண்டிருந்தார்கள். பழையாறையில் அரண்மனைப் பெண்டிர் சுயேச்சையாக இருக்க முடிந்தது. விருப்பம் போல் வெளியில் போகலாம் வரலாம். ஆனால் தஞ்சையில் வசித்தால் பழுவேட்டரையர்களின் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டுத் தீர வேண்டும். கோட்டைக்குள்ளும், அரண்மனைக்குள்ளும் இஷ்டம்போல் வருவதும் போவதும் இயலாத காரியம். அம்மாதிரி கட்டுப்பாடுகளும், நிர்ப்பந்தங்களும் இளைய பிராட்டிக்குப் பிடிப்பதில்லை. அல்லாமலும் பழுவூர் இளையராணியின் செருக்கும், அவளுடைய அகம்பாவ நடத்தைகளும் குந்தவைப் பிராட்டிக்கு மிக்க வெறுப்பை அளித்தன. அரண்மனைப் பெண்டிர்கள் பழையாறையில் இருப்பதையே சக்கரவர்த்தியும் விரும்பினார். இந்தக் காரணங்களினால் குந்தவைப் பிராட்டி பழையாறையிலேயே வசித்து வந்தாள். உடம்பு குணமில்லாத தன் அருமைத் தந்தையைப் பார்க்கவேண்டும், அவருக்குப் பணிவிடை செய்ய வேண்டும் என்ற ஆர்வத்தையும் கட்டுப்படுத்திக் கொண்டிருந்தாள்.

ஆனால் வந்தியத்தேவன் வந்துவிட்டுப் போனதிலிருந்து இளைய பிராட்டியின் மனத்தில் ஒரு மாறுதல் ஏற்பட்டிருந்தது. இராஜரீகத்தில் பயங்கரமான சூழ்ச்சிகளும், சதிகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது நாம் பழையாறையில் உல்லாசமாக நதிகளில் ஓடம் விட்டுக்கொண்டும், பூங்காவனங்களில் ஆடிப்பாடிக் கொண்டும் காலங் கழிப்பது சரியா? தமையன் தொண்டை நாட்டில் இருக்கிறான் தம்பியோ ஈழநாட்டில் இருக்கிறான் அவர்கள் இருவரும் இல்லாத சமயத்தில் இராஜ்யத்தில் நடக்கும் விவகாரங்களை நாம் கவனித்தாக வேண்டும் அல்லவா? தலை நகரில் அவ்வப்போது நடக்கும் நிகழ்ச்சிகளை அந்தரங்கத் தூதர்கள் மூலம் அறிவிக்க வேண்டும் என்று தமையன் ஆதித்த கரிகாலன் கேட்டுக் கொண்டிருக்கிறானே? பழையாறையில் வசித்தால் தஞ்சையில் நடக்கும் காரியங்கள் எப்படித் தெரியவரும்?

வந்தியத்தேவன் அறிவித்த செய்திகளோ மிகப் பயங்கரமாயிருந்தன. பழுவேட்டரையர்கள் தங்கள் அந்தஸ்துக்கு மீறி அதிகாரம் செலுத்தி வந்தது மட்டுமே இதுவரையில் இளைய பிராட்டிக்குப் பிடிக்காமலிருந்தது. இப்போதோ சிம்மாசனத்தைப் பற்றியே சூழ்ச்சி செய்ய ஆரம்பித்துவிட்டார்கள். பாவம்! அந்தப் பரம சாது மதுராந்தகனையும் தங்கள் வலையில் போட்டுக் கொண்டார்கள். சோழ நாட்டுச் சிற்றரசர்களையும், பெருந்தரத்து அதிகாரிகள் பலரையும் தங்கள் வசப்படுத்திக் கொண்டார்கள். எந்த நேரத்தில் என்ன நடக்குமோ, தெரியாது. இவர்களுடைய சூழ்ச்சியும், வஞ்சனையும், துராசையும் எந்த வரையில் போகும் என்று யார் கண்டது? சுந்தர சோழரின் உயிருக்கு உலை வைத்தாலும் வைத்துவிடுவார்கள்! மாட்டார்கள் என்று எப்படிச் சொல்ல முடியும்? சக்கரவர்த்தியின் புதல்வர்கள்.

(தொடரும்...)

## தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு நாவற்குழி பொதுநூலகம் வழங்கும் ஆக்கங்கள்

## நீ புத்தகத்தை நேசித்தால் உலகம் உன்னை நேசிக்கும்

- புத்தகம் என்பது மனித வாழ்வுடன் இணைந்த ஒன்றாகும்.
- புத்தகத்தை நேசிப்பவன் வாழ்வில் ஒரு போதும் தோற்பதுமில்லை. ஏமாந்து போவதுமில்லை.
- மூடி இருக்கும் புத்தகத்தினுள் கோடி அர்த்தங்கள் புதைந்திருக்கும். அதை தேடிப்படிக்காதவரை தேவையான அர்த்தம் கிடைக்காது.
- நீ புத்தகத்தை நேசித்தால் உலகம் உன்னை நேசிக்கும்.
- உலகத்தை புதுப்பிக்க நினைப்பவன் எழுதுகோலைக் கையில் எடுப்பான் தன்னைத்தானே புதுப்பிக்க நினைப்பவ்ன் புத்தகத்தை கையில் எடுப்பான்.

புத்தகத்தை வாசியுங்கள் புத்துணர்வோடு சுவாசியுங்கள்

ஐ.அதிஷ்டதாரணி,
யா.நாவற்குழி மகாவித்தியாலயம்.

## பொது அறிவுத் தகவல்கள்

உலகில் மிகப்பெரிய விலங்கு எது?
திமிங்கிலம்

உலகில் உயரமான விலங்கு எது?
ஒட்டகச்சிவிங்கி

உலகில் மிகவும் உயரமான மலை எது?
இமயமலை

உலகிலேயே மிகவும் நீளமான நதி எது?
அமேசன் நதி

உலகிலேயே மிகவும் நீளமான ஆழி எது?
மரியானா ஆழி

உலகிலேயே மிகப்பெரிய நகரம் எது?
லண்டன்

உலகிலேயே பெரிய பாலைவனம் எது?
சஹாராப் பாலைவனம்

உலகிலேயே மிகச் சிறிய அரசு எது?
வத்திக்கான்

உலகிலேயே மிகப் பெரிய சமுத்திரம் எது?
பசுபிக்சமுத்திரம்

உலகிலேயே மிகப்பெரிய சிகரம் எது?
எவரெஸ்ட்

உலகிலேயே பெரிய தீவு எது?
கிறீன்லாந்து

உலகிலேயே பெரிய கண்டம் எது?
ஆசியாக் கண்டம்

உலகிலேயே சிறிய கண்டம் எது?
அவுஸ்திரேலியா

ஞ.ராகவி, தரம் - 07
யா/கைதடி நாவற்குழி அரசினர் தமிழ்கலவன் பாடசாலை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கலங்காத உள்ளம் படைத்தவர்களே
இறுதி வெற்றிக்கு உரியவர்கள்.
– சுபாஷ் சந்திரபோஸ்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இஸ்ரேலின் கொடும் போரை அமெரிக்கா ஆதரிப்பது முறையன்று

இஸ்ரேல் மீது ஹமாஸ் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலைத் தொடர்ந்து காசா மீது இஸ்ரேலியப் படைகள் கொடூரத் தாக்குதலை நடத்தி வருகின்றன.

இதனால் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். இது தவிர, காசாவில் வதியும் சுமார் 23 இலட்சம் மக்கள் உதவுவார் யாருமின்றி நிர்க்கதியாகியுள்ளனர்.

ஹமாஸ் தீவிரவாதிகள் இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தினர் என்பதற்காக, காசா மீது குண்டுகளை வீசி அப்பாவி பொதுமக்களை கொன்று குவிப்பது என்பது எந்தவகையிலும் நியாயமாகாது.

ஆம், நேற்றைய தினம் இஸ்ரேல் யுத்த விமானங்கள் காசாவிலுள்ள மருத்துவமனையொன்றின் மீது நடத்திய மிலேச்சத்தனமான குண்டுத் தாக்குதலில் சுமார் 500 பொதுமக்கள் கொல்லப்பட்டனர் என்ற துயரச் செய்தி ஜீரணிக்க முடியாதது.

யுத்தம் புரிவதாயினும் அதிலும் தர்மம் இருக்க வேண்டும். பொதுவில் மருத்துவமனைகள், பாடசாலைகள், வழிபாட்டுத் தலங்கள் மீது தாக்குதல் நடத்துவது யுத்த தர்மமாகாது.

ஆகையால் காசாவிலுள்ள மருத்துவமனை மீது இஸ்ரேலியப் படைகள் குண்டுத் தாக்குதல் நடத்தியமை மன்னிக்க முடியாத ஈனச் செயல்.

இருந்தும் இஸ்ரேலின் தாக்குதலைக் கண்டிப்பதற்கும் காசாவிலுள்ள மக்களைப் பாதுகாப்பதற்கும் உலக நாடுகள் தயாராக இல்லை எனும்போதுதான் உலக வல்லரசுகள் மீது வெறுப்பும் ஆத்திரமும் ஏற்படுகிறது.

உண்மை. இஸ்ரேலுக்கு ஆதரவாக அமெரிக்கா தனது யுத்தக் கப்பல்களை அந்நாட்டுக் கடல் எல்லைப் பகுதிக்கு அனுப்பி வைத்துள்ளது.

இதுதவிர, அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் நேற்றைய தினம் இஸ்ரேலுக்கு விஜயம் மேற்கொண்டு காசா மீது இஸ்ரேல் நடத்துகின்ற கொடிய யுத்தத்துக்கு தனது ஆதரவை தெரிவித்துள்ளார்.

உலக வல்லரசான அமெரிக்கா இஸ்ரேலுக்கு ஆதரவாக இருப்பதென்பது வேறு. ஆனால் இஸ்ரேல் காசா மக்களைக் கொன்று குவிக்கும்போது அதற்கு அமெரிக்கா ஆதரவு வழங்குவதென்பது அமெரிக்கா அதர்மத்துடன் செயற்படுகிறதென்பதையே சுட்டி நிற்கிறது.

உண்மையில் உலக வல்லரசான அமெரிக்கா அனைத்துப் பொதுமக்களைப் பாதுகாப்பதில் மிகுந்த கருசனை காட்ட வேண்டும்.

அதனை அமெரிக்கா செய்யாததன் காரணமாக அப்பாவி பொதுமக்க்ள் காசாவில் கொல்லப்படுகின்றனர்.

இந்தநிலைமை தனது எதிரிகளுக்கானதென அமெரிக்கா நினைத்து திமிர்த்தனம் காட்டக்கூடாது.

ஏனெனில் இயற்கை அமெரிக்காவையும் தண்டிக்கும் என்ற உண்மை மறப்பதற்குரியதல்ல.

# பூச்சிக்கொல்லி மருந்துகளில் மோசடி; சட்ட நடவடிக்கைகளுக்கு தயார்

## விவசாய அமைச்சர் அதிரடி அறிவிப்பு

(கொழும்பு)

ஒரே பூச்சிக்கொல்லி மருந்தை வெவ்வேறு பெயர்களில் அதிக விலைக்கு விற்பனை செய்வதை உடனடியாக ஒழுங்குபடுத்துமாறு விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர பூச்சிக்கொல்லி பதிவாளருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

பிரதேச விவசாய அமைப்புகள் மேற்கொண்ட முறைப்பாட்டினை அடிப்படையாகக் கொண்டே விவசாய அமைச்சர் இந்த அறிவித்தலை வழங்கியுள்ளார்.

சந்தையில் விற்பனை செய்யப்படும் பூச்சிக்கொல்லி மருந்துகளின் பெயர்களில் 75 சதவீத களைகொல்லி மற்றும் பூச்சிக் கொல்லிகளில் இரசாயனப் பெயர் இடம்பெற்றிருக்கவேண்டும்

ஆனால், சில பிரதேசங்களில் விற்பனை செய்யப்படுகிற பூச்சிக் கொல்லி மருந்துகளில் அதே தரம் பின்பற்றப்படுவதில்லை என விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இது குறித்து முறையான முடிவுகளை எடுக்க வேண்டும் என்று விவசாய அமைச்சருக்கு முன்வைக்கப்பட்ட முறைப்பாடுகளைத் தொடர்ந்து அமைச்சர் பூச்சிக்கொல்லிகளின் விற்பனை விலையை ஒழுங்குபடுத்த ஆணை பிறப்பித்துள்ளார்.

மேலும் இதுபோன்ற மோசடிகளை இனம் கண்டால் விவசாயத் துறை, விவசாய அமைச்சு மற்றும் பூச்சிகொல்லி பதிவாளர் போன்ற அலுவலகங்களுக்கு உடனடியாக தெரியப்படுத்தும் படியும் அமைச்சர் அறிவுறுத்தியுள்ளார்.

உரிய முறைப்பாடுகளினை அடிப்படையாகக் கொண்டு குறித்த மோசடி நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை நடைமுறைப்படுத்தப்படும் எனவும் அமைச்சர் தெரியப்படுத்தினார். (நி-5-6)

## நுவரெலியா பகுதியில் பாரிய மண்சரிவு

(நுவரெலியா)

நுவரெலியா - கந்தப்பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொங்கோடியா தோட்ட பகுதியில் வீதியில் பாரிய மண்சரிவு ஏற்பட்டுள்ளது.

தொடர்ந்து நிலவி வரும் சீரற்ற கால நிலை காரணமாக கந்தப்பளை நகரில் இருந்து கொங்கோடியா, கல்லாலவத்தை தோட்ட வழியாக இராகலையை நோக்கி செல்லும் பிரதான வீதியில் இந்த மண் சரிவு ஏற்பட்டுள்ளது. (நி-5-6)

## பொதுமக்கள் மீதான தாக்குதல்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்

### சுமந்திரன் எம்.பி டுவிட்

(கொழும்பு)

காசாவில் உள்ள வைத்தியசாலை மீதான தாக்குதல் கடுமையான போர்க் குற்றம் என தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

2009 இல் புதுக்குடியிருப்பு வைத்தியசாலை மீதான தாக்குதலிற்கு இலங்கை இராணுவம் இதே போன்ற நொண்டிச்சாட்டை தெரிவித்தது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொதுமக்கள் மீதான தாக்குதல்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண் டும் என்றும் அவர் தனது டுவிட்டர் பதிவில் தெரிவித்துள்ளார். (நி-5-6)

## சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள் அடுத்த மாத இறுதியில் வெளியாகும்

### பரீட்சை ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதரப் பரீட்சை தொடர்பான பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் கணினி மயமாக்கப்பட்டு வருவதாகவும், முடிவுகள் அடுத்த மாத இறுதியில் வெளியிடப்படும் எனவும் பரீட்சை ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்தார்.

பெறுபேறுகளை கணினி மயமாக்கும் தினசரி திறன் இரண்டரை இலட்சம் என்றும், பரீட்சை முடிவுகளை மாணவர்களுக்கு விரைவில் வழங்க பரீட்சை திணைக்கள ஊழியர்கள் இரவு பகலாக உழைத்து வருவதாகவும் தெரிவித்தார்.

2022 (2023) கல்விப் பொதுத் தராதரப் பரீட்சையின் பெறுபேறுகள் உயர்தர விடைத்தாள்களை மதிப்பீடு செய்வதில் ஏற்பட்ட தாமதத்தினால் தாமதமாகியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-5-6)

## இஸ்ரேல்-பாலஸ்தீன மோதலால் அதிகரிக்கும் தங்கத்தின் விலை

(கொழும்பு)

இஸ்ரேல் - பாலஸ்தீன மோதலின் தாக்கத்தால் தங்கத்தின் விலையில் குறிப்பிடத்தக்க அளவு உயர்வு ஏற்பட்டுள்ளது.

தற்போதைய நிலையில், கடந்த வாரம் வெளிநாட்டு சந்தையில் தங்கத்தின் விலை கடுமையாக உயர்ந்துள்ளதால், உள்ளூர் தங்கத்தின் விலையும் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வெளிநாட்டு சந்தையில் ஒரு அவுன்ஸ் தங்கம் இந்த வாரம் 1,820 டொலரில் இருந்து 1,925 டொலராக அதிகரித்துள்ளது.

இதன்படி, கடந்த வாரத்துடன் ஒப்பிடுகையில் ஒரு பவுன் தங்கத்தின் விலை 7,000 ரூபாவினால் அதிகரித்துள்ளதாக தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபை தெரிவித்துள்ளது.இதன்படி, 24 கரட் தங்கம் ஒரு பவுண் தற்போது 173,000 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுவதாகவும் அதே அதிகார சபை மேலும் தெரிவித்துள்ளது. (நி-5-6)

## தேயிலை உற்பத்தி 12 சதவீதத்தினால் வீழ்ச்சி

(கொழும்பு)

இலங்கையில் தேயிலை உற்பத்தியானது கடந்த ஆண்டு செப்டெம்பருடன் ஒப்பிடுகையில், இவ்வாண்டு 12 சதவீதத்தினால் குறைவடைந்துள்ளதாக இலங்கை தேயிலை சபை தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு செப்டெம்பரில் 21, 230, 665 கிலோ கிராம் தேயிலை உற்பத்தி செய்யப்பட்டுள்ள போதிலும், இவ்வாண்டு 18, 723? 511 கிலோ கிராம் தேயிலையே உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

இது கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2, 507, 154 கிலோ கிராமால் குறைவடைந்துள்ளதாக தேயிலை சபை தெரிவித்துள்ளது.

செப்டெம்பர் மாதத்தில் தேயிலை உற்பத்தி குறைவடைந்துள்ள போதிலும், கடந்த ஜனவரி முதல் செப்டெம்பர் வரையான காலப்பகுதியில் உற்பத்தி சற்று அதாவது 0.2 சதவீதத்தினால் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (நி-5-6)

## மின்சாரம் தடைப்படும்

- உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் ப்ராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை காலை 08.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை **வவுனியா பிரதேசத்தில்** மகாறம்பைகுளம்,தெற்கிலுப்பை குளம் ஆகிய பிரதேசங்களில் மின்சாரம் தடைப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக உணவு தினம்: இம்முறை நீருக்கு முன்னுரிமை

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

2023 ஒக்டோபர் 16 இல் உலகளாவிய உணவு தினத்தை உலக உணவு தாபனம் 1945ஆம் ஆண்டு ஆரம்பித்த நாளை நினைவிலிருத்தி "அதிகரித்து வரும் உலகளவிலான பஞ்சம் பட்டினியை முன்னிலைப்படுத்தி அதிலும் உணவு உற்பத்திக்கு தேவையான நீர் இற்கு முக்கியத்துவம் கொடுத்து பல நிகழ்வுகளை நடாத்தியிருக்கின்றது. நீரின்றி இவ்வுலகேது என்னும் பொய்யா மொழிக்கிணங்க நீரின்றி உணவில்லை என்பதனையும் உணவின்றி மக்களில்லை என்னும் அறைகூவல்கள் ஜெனீவாவிலிருந்து ஒலித்துக் கொண்டிருக்கின்றது. உணவுப் பாதுகாப்பு என்பதன் விரிவாக்கமாக நீர் பாதுகாப்பும் முக்கியமானதாக உணரப்பட்டிருக்கின்றதுடன் இதுபற்றிய கலந்துரையாடல்களும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நீரின் தேவை உணவுற்பத்தியில் அவசியம் என்பதனை முன்னிறுத்தி நீரின் பாதுகாப்பையும் இதில் உள்ளடக்கியிருக்கின்றார்கள். நீரைத்தேடியோடும் நிலைக்கு வரட்சி பலநாடுகளை ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கின்றது. மாறாக வெள்ளப்பெருக்கும் தவிர்க்கமுடியாத துன்பியல் நிகழ்வாக மாறியிருக்கின்றது.

உலகத்தில் இவ்வருடம்எதிர்பாராத விதமாக பலவிதமான இயற்கை அழிவுகளையும் மனித அழிவுகளையும் சந்தித்துக் கொண்டிருக்கின்றது. பல நாடுகளில் உணவின்றி மக்கள் தவிப்பதனை தினந்தினம் செய்திகள் தெரிவிக்கின்றன. போர்மேகம் ஐரோப்பாவில் தொடங்கி ஆசியாவின் மேற்குக் கரையில் மையம் கொண்டிருப்பது பலவழிகளில் இன்னும் பிரச்சினைகளை தோற்றுவிக்கப் போகின்றது. பெரியவர் சிறியவர் என்பதிலேயே அப்பாவிகளான பலவுயிர்கள் காவு கொள்ளப் படுகின்றன. இதில் ஒரு வேளை உணவுக்காக தவிக்கும் நிலையை உலகம் கணக்கிலெடுக்காதிருப்பது ஆச்சரியத்திற்குள்ளாகின்றது. எப்படியாவது போர்மேகத்தினை உருளவைத்து தம்மிடமிருக்கும் போர்த்தளபாடங்களை பரீட்சித்துப் பார்க்கும் களமாக இவ்வாறான நிகழ்வுகளை விரும்பி ஏற்படுத்தி அப்பாவி மக்களின் உயிர்களை காவுகொள்ளும் நிலைமையை எதுவும் தடுத்து நிறுத்தவில்லை.

ஐக்கிய நாடுகள் தாபனத்தினால் பேண்தகு அபிவிருத்தி இலக்குகளில் உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பு என 2030ஆம் ஆண்டை நிர்ணயஞ் செய்திருந்தாலும் அதற்கான சாத்தியக்கூறு அருகிவருவதாகவே தென்படுகின்றது. உலகம் அழிவுப்பாதையை தேர்ந்தெடுத்ததன் விளைவாக அநாவசியமாக மக்கள் இறக்கின்ற நிலை ஏற்பட்டிருக்கின்றது. உலக அழிவுக்கான பாதையை விஞ்ஞானத்தின் அபரிவிதமான வளர்ச்சியும் ஊக்குவிக்கின்றதா என்னும் ஒரு தோற்றப்பாடும் எழுந்திருக்கின்றது. உலகளாவிய கண்டுபிடிப்புக்கள் பரீட்சித்துப் பார்க்கும் தளமாக இவ்வாறான நொந்து போன மக்களை பயன்படுத்துவது எந்த விதமான நியாயப்படுத்தல்களுக்கும் உட்படாது.

உணவு உற்பத்தியில் பாரியளவிலான வீழ்ச்சியேற்பட வாய்ப்பிருக்கின்றது. அதில் உணவுப்பஞ்சம் என்பது ஒரு புறமிருக்க ஊட்டச்சத்து குறைபாடு என்பது இன்னொரு பிரச்சினையாக எழுந்திருக்கின்றது. பொதுவாக கடந்த நூற்றாண்டில் பஞ்சத்தின் வீரியம் குறைவடைந்ததாக காணப்பட்டாலும் தற்போது உலக சனத்தொகையைக் கருத்தில் கொண்டால் பதினொரு சதவீதம் அதிகரித்திருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. தென்சூடான் நைஜீரியா, சோமாலியா மற்றும் யேமன் ஆகிய நாடுகள் இவ்வாறான உணவுப் பஞ்சத்தை பாரியளவில் தற்போது உணர்ந்திருக்கின்றன. இந்நாடுகளில் உள்நாட்டுப் போர்கள் உக்கிரமாக நடைபெற்றுக் கொண்டிருப்பதும் ஏதுமறியாத பொதுமக்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் தினந்தினம் அதிக எண்ணிக்கையில் இறந்து கொண்டிருப்பதும் ஒருபுறமிருக்க ஐரோப்பாவில் ரஷ்யா-உக்ரைன் போரும் இஸ்ரேல்-பாலஸ்தீன போரும் இந்த நிலைமையை மேலும் சிக்கலாக்கியிருக்கின்றது.

உணவுப் பஞ்சத்தைப் பொறுத்த வரையில் ஆபிரிக்காவிலுள்ள சகாரா பகுதி, தென்கிழக்கு மற்றும் மேற்கு ஆசிய பகுதிகளில் அதிகமாக பாதிக்கப்பட்ட மக்கள் வாழ்வதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. இவ்வாறான பிரதேசங்கள் உள்நாட்டுப் போரில் தம்மையே அழித்துக்கொண்டிருக்கும் போது இயற்கையின் அனர்த்தங்களான வெள்ளப்பெருக்கு மற்றும் வறட்சி என்பன இன்னொரு பக்கத்தில் இம்மக்களை

## இனியொரு பசுமைப்புரட்சிக்கு...




வரட்டியெடுத்துக் கொண்டிருக்கின்றன. எல்நினோவின் தாக்கமும் காலநிலை மாற்றத்தின் தாக்கமும் இவற்றுக்கு மேலும் வலுவூட்டுவதாகவே அமைந்திருக்கின்றதாக செய்திகள் தெரிவிக்கின்றன. கடந்த பத்தாண்டுகளில் உலகளாவிய ரீதியில் உள்நாட்டுப்போர்கள் வலுவடைந்திருக்கின்றதாக தெரிவித்திருக்கின்றனர்.

இந்த வருடம் இம்மாதத்திலேயே போரின் உக்கிரம் விசாலமடைந்து காணப்படுகின்றது. இதன் மூலமாக மக்கள் தமது வாழ்விடங்களை விட்டு இடம்பெயர்ந்ததும் இன்னும் விவசாயத்தை மேற்கொள்ள முடியாத சூழ்நிலைகள் ஏற்படுத்தப்பட்டதாலும் இவ்வாறான துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டிருக்கின்றன. உணவுப் பஞ்சம் ஒருபுறமிருக்க கிடைக்கின்ற உணவும் ஊட்டச்சத்தற்ற உணவாக ஒரு மனிதனுக்கு தேவையான அடிப்படை ஊட்டச்சத்து கூட இல்லாதிருக்கின்ற நிலையும் காணப்படுகின்றது.

தற்போது உலக உணவு உற்பத்தி இப்போதிருக்கின்ற மக்களுடைய தேவையை பூர்த்தி செய்ய போதுமானதாக அறிவிக்கப்பட்டும் இந்த உற்பத்தியான உணவு சரியாக பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தால் இவ்வாறான பஞ்சம் ஏற்படுவதற்கு சாத்தியமேயில்லை. அப்படியாயின் உணவு உற்பத்தி, அதன் கிடைக்கும் தன்மை என்பனவற்றையும் தாண்டி உற்பத்தியான உணவை உலகத்திலுள்ள அனைத்து மக்களுக்கும் கிடைக்கச்செய்வதில் சிக்கல்கள் எழுந்திருக்கின்றன. ஏதோ ஒரு காரணி தடைக்கல்லாக இருப்பது உணரப்படுகின்றது அல்லவா? இதன் பின்புலத்தில் உற்பத்தியில் தன்னிறைவு கண்ட நாடுகள் குறிப்பாக வளர்ந்த நாடுகள் இருப்பதென்பது விசித்திரமாகவும் ஆச்சரியமாகவும் இருக்கின்றதல்லவா. அந்த நாடுகளிலிருந்து தான் நாம் எமக்கு வருடாவருடம் கடனையும் பெற்றுக்கொள்ளுகின்றோம். பட்டினி போட்டுவிட்டு கடனும் தருகின்ற செயலை என்னவென்பது? காலாகாலத்திற்கு கடனாளியாகவே இருந்தால் தான் எம்மையும் ஏதோவொருவிதத்தில் ஆளுமைக்குட்படுத்த முடியும் என்னும் எண்ணம் இருக்கும் வரை இது தொடரத்தான் போகின்றது: மாறாக நாமாக சிந்தித்து எமது வளங்களை பயன்படுத்தி எமது நாட்டை நாம் முன்னுயர்த்த என்று முயற்சிக்கின்றோமோ அன்றிலிருந்து தான் எமக்கு விடிவுகாலம் என்பதனை நம்மினிய உறவுகள் இதிலிருந்து புரிந்து கொள்ள வேண்டும்.



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்

விஞ்ஞானம் விண்ணில் பறந்து பிற கோள்களில் மனிதன் வாழலாமா என பெருமெடுப்பில் போட்டி போட்டு ஆய்வினை செய்துகொண்டிருக்கும் இக்கால கட்டத்தில் உலகத்தின் ஏதோ ஒரு மூலையில் மக்கள் பட்டினியால் இறந்து கொண்டிருக்கின்றார்களென்பது எல்லோர் மனதையும் ஒருகணம் உலுப்பிவிட்டிருக்கின்றதல்லவா. நன்றாக கவனியுங்கள்! இந்த நிலைமை இங்கும் இருக்கின்றது. உணவு உற்பத்தி ஒருபுறமும் தினமும் ஒரு வேளை கஞ்சிக்கும் வழியில்லாது அல்லாடிக்கொண்டிருக்கும் மக்களை கிராமங்களுக்குள்ளே எந்தவித வருமானமுமின்றி உதவிகளுமின்றி விடப்பட்டுள்ள குடும்பங்களை கேட்டறிந்தால் தெரிந்துகொள்வீர்கள். விஞ்ஞானத்தின் உயர்வு ஆக்கத்திற்காய் இருக்கும் மட்டும் அனைத்தும் நல்லதாகவே இருக்கும் ஆனால் அதனை அழிப்பதற்கும் தீங்கு செய்வதற்கும் புதிய கண்டுபிடிப்புக்களை பரீட்சித்து பார்க்கவும் முயலும் போது விஞ்ஞான வளர்ச்சியின் எதிர்பார்த்த நோக்கம் ஈடேறவில்லை எனவே தோன்றுகின்றது.

உணவுற்பத்தியிலும் ஊட்டச்சத்தினை சமனிலைப்படுத்தும் நிலைக்கும் இந்த பாரபட்சம் நடந்து கொண்டிருக்கின்றது. உலக ஓட்டத்தில் விரைந்துணவு தயாரிக்கும் நிலையில் உலகம் இயங்கிக்கொண்டிருக்கின்றது ஆனால் அதற்காக இயற்கையின் தன்மையை மாற்றி சூழலையும் மாற்றி புதியவகை இனங்களை உற்பத்தி செய்து அதனால் ஏற்படும் பின்விளைவுகளை சிறிதேனும் சிந்தியாது சுழன்றுகொண்டிருக்கும் இவ்வுலகத்தின் சமகால நடப்புக்கள் ஒரு போதும் மக்களின் தேவைகளை முழுமையாக பூர்த்தி செய்யப்போவதில்லை மாறாக பல தீங்கான நிலைமைகளுக்குள்ளேயே தள்ளிவிடுகின்றன. பசியும் பட்டினியும் இன்னும் தலைவிரித்தாடும் நிலைமைகளே அனுமானிக்கப்படுகின்றன.

பட்டினியின் பிடிக்குள் சிக்கி சின்னாபின்னப்பட்டுக் கொண்டிருக்கும் பல நாடுகள் கடந்த பத்து ஆண்டுகளாக உள்நாட்டுப் போரின் உக்கிரத்தினுள் உடைந்து போனவையாகவே காணப்படுகின்றன. இருப்பதையும் அழித்தொழித்து உதவியென்று உள்நாட்டுப் போர்களை ஊக்குவித்து அந்தந்த நாடுகளில் அபிவிருத்தியின் அடித்தளமான கிராமங்கள் உடைத்தெறியப்பட்ட சோகக் கதைகளே அநேகம். அடித்தளத்தை உடைத்தெறிந்து விட்டு எவ்வாறு அபிவிருத்தியை மேற்கொள்ள முடியும். அதிலும் உணவுற்பத்தியின் மையங்களே கிராமங்கள் தானே! அபிவிருத்தி பற்றி கருத்தரங்கு மற்றும் மாநாடுகள் பல நடைபெற்றும் அவற்றின் தொனிப்பொருளான கிராம அபிவிருத்தி பற்றிய தீர்க்கமான முடிவுகள் பெறப்படவில்லை அத்துடன் அவற்றை அபிவிருத்தி செய்யும் நோக்கமும் முழுமைபெறவில்லை. சாக்குப் போக்குக்கு செய்யப்படும் திட்டங்களாகவும் அவற்றினால் மக்களுக்கான வழிகாட்டல்கள் முழுமையானதாக இல்லாதிருப்பதும் கவலைதரும் விடயங்களே!

பசி பட்டினியினோடு சேர்ந்து ஊட்டச்சத்து குறைபாடும் சேர்ந்து மக்களை வாட்டுகின்ற சோகம் உலகத்தில் நடந்து கொண்டிருப்பது அனைவருக்கும் தெரிகின்றதா? சத்துணவு திட்டங்கள் உருவாக்கப்பட்ட இடங்கள் பலவற்றில் ஒரு வேளை உணவுக்காகவாவது பாடசாலைக்கு பிள்ளைகள் செல்வது அவதானிக்கப்பட்டுள்ளது. உலகத்திலுள்ள 5 வயதிற்கு கீழான 155 மில்லியன் சிறுவர்கள் அல்லது பிள்ளைகள் ஊட்டச்சத்து குறைபாட்டினால் பாதிக்கப்பட்டிருக்கின்றனர் எனும் மிகமுக்கியமான தகவல் அனைவரையும் சிந்திக்க துண்டியிருக்கின்றது. இன்னும் நம்மில் பலருக்கு இந்த ஊட்டச்சத்து குறைபாட்டினால் ஏற்படும் பாதிப்புக்களைக் கூட அறிந்துணர முடியாதிருப்பதனை என்னவென்பது.

இந்த பிரச்சினைகளை மையப்படுத்தி நமது பிரதேசத்து திட்டங்களை னைத்தும் இவற்றுக்கான தீர்வினை வலியுறுத்துவதாக இருக்கவேண்டும். திட்டங்களின் முடிவுகள் மாற்றுவழிகளை பரிந்துரைக்கும் நேரத்தில் அவற்றிற்கான முடிவுகளையும் தீர்க்கமானதாக அறிவிக்க வேண்டும். எமது பிரதேசத்தில் இந்த உணவுத்தட்டுப்பாடு ஏற்படாமலும் ஊட்டச்சத்து குறைபாட்டினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் இன்னும் அவசியம் தேவைப்படுவோர் என இனங்காணப்படுபவருக்கும் உதவிட வேண்டும்.

உள்நாட்டுப் போரில்துவண்டு போன வட உகண்டா நாடு போருக்கும் பின்னரான சரியான திட்டமிடல்களுக்கூடாக தற்போது தம்மை வளமுள்ளவர்களாக மாற்றிக் கொண்டிருக்கின்றார்கள். வளமான சந்ததியின் எதிர்காலம் சரியாக திட்டப்படும் திட்டங்களிலும் அவற்றை நடைமுறைப்படுத்துவதிலும் மேலும் அதற்கான சேவைகளிலும் தங்கியிருக்கின்றது.

எம்மை நாமே காப்பாற்றிக் கொள்ளும் வாழ்க்கை முறைக்குள் நாமாக வந்திருப்பதனை மேற்கூறிய அனைத்தும் உணர வைத்திருக்கின்றன. எமது உள்ளூர் வளங்களை சிறப்பாக வினைத்திறனாக எமது வாழ்வியல் விடிவுகளை வெளிக்கொணர நாம் இன்னும் முயற்சி செய்வோம். இதில் தான் எமது வாழ்க்கைக்கு அர்த்தமும் இருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாவசிய...

தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இறக்குமதி செய்யப்படும் 425 கிராம் ரின் மீன்களின் விலை 35 ரூபாயினால் குறைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 650 ரூபாயாகும்.

உள்ளூர் ரின் மீன்களின் (425 கிராம்) விலை ரூ.5 குறைக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை ரூ.545 ஆக உள்ளது.

ஒரு கிலோ பச்சை பயறின் விலை 20 ரூபாயினால் குறைக்கப்பட்டுள்ளதுடன் அதன் புதிய விலை 1100 ரூபாயாகும்.

ஒரு கிலோ நெத்தலியின் விலை 10 ரூபாயினால் குறைக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 1090 ரூபாயாகும்.

ஒரு கிலோ கொத்தமல்லியின் புதிய விலைரூ.540 ஆகவும் அதன்விலைரூ.10 ஆகவும் குறைக்கப்பட்டுள்ளது. (ம-7)

## அரசு மின்...

இன் கீழ் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அரசாங்கத்திடமும் சம்பந்தப்பட்ட அமைச்சரிடமும் பல கேள்விகளை முன்வைத்து நேற்று சபை அமர்வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மீண்டும் மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்குமாறு இலங்கை மின்சார சபையானது இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும், 2009 ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க மின்சாரச் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட அரசாங்க கொள்கை வழிகாட்டுதல்களின் பிரகாரம், ஆண்டுக்கு இரண்டு முறை மட்டுமே மின் கட்டணத்தை திருத்த கொள்கை ரீதியாக முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும், இந்தக் கொள்கைக்கு மாறாக மூன்றாவது தடவையாகவும் மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்க அரசாங்கம் தயாராகி வருவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

இதனால் மக்கள் படும் துயரங்களை அரசாங்கம் கண்டுகொள்ளாமல் இருப்பது வருத்தம் அளிப்பதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார். (ம-7)

## யாழ். - தமிழக...

தமிழகத்தின் நாகபட்டினத்தில் இருந்து இலங்கையின் காங்கேசன் துறை இடையிலான பயணிகள் கப்பல் சேவையின் தொடக்க நிகழ்வினை இந்திய பிரதமர் நரேந்திர மோடி காணொளி ஊடாக ஆரம்பித்து வைத்திருந்தார்.

இந்நிலையில் கடந்த 15ஆம் திகதியன்று நாகையிலிருந்து- காங்கேசன் துறைக்கு பயணிப்பதற்காக ஏழு பேர் மாத்திரமே முன்பதிவு செய் திருந்தனர். இதனையடுத்தே நாளை வெள்ளிக்கிழமை முதல் நாகை காங்கேசன் துறை இடையேயான பயணிகள் கப்பல் சேவை இடைநிறுத்தப்படுவதாகவும் மீண்டும் பயணிகள் கப்பல் சேவை எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் வழமைக்கு திரும்பும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## நீதிச் சேவை...

விசேட அறிவிப்பொன்றை வெளியிட்ட நீதி அமைச்சர்,

தனக்கு மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக குற்றச்சாட்டை முன்வைத்த முல்லைத்தீவு மாவட்ட முன்னாள் நீதிபதி சரவணராஜாவிடம் நீதிச் சேவை ஆணைக்குழு விசாரணைகளை முன்னெடுத்து வருகிறது.

அவரது குற்றச்சாட்டுகளுக்கு பின்னர் நீதி சேவை ஆணைக்குழுவின் அதிகாரிகள் முல்லைத்தீவு மற்றும் கொக்குத்தொடுவாய் பகுதிகளுக்கு சென்று விசாரணைகளை மேற்கொண்டனர்.

நீதிச் சேவை ஆணைக்குழுவின் செயலகம், செயலாளர், அதிகாரிகள் மற்றும் அவருடன் அருகில் பணியாற்றிய எவருக்கும் தமக்கு மரண அச்சுறுத்தல்கள் ஏற்பட்டுள்ளதாக நீதிபதி எதனையும் தெரிவித்திருக்கவில்லை.

நீதிபதி சரவணராஜா வழங்கியுள்ள தீர்ப்புகள் குறித்து பல வழக்குகள் நிலுவையில் உள்ளன. சட்டமா அதிபர் இவருக்கு எவ்வித அழுத்தங்களை கொடுக்கவில்லை என்பதையும் நாம் பொறுப்புடன் கூறுகிறோம்.

தமிழ்நாட்டில் உள்ள ஒரு நோயாளியை பார்வையிட செல்ல நீதிபதி சரவணராஜா விடுமுறை கோரிக்கை கடிதத்தையும் வழங்கியுள்ளார். ஆகவே, அவர் விடுமுறையின் போர்வையிலேயே சென்றுள்ளார்.

அவரது இராஜினாமா கடிதத்தை நீதிசேவை ஆணைக்குழு இன்னமும் ஏற்றுக்கொள்ளவில்லை. விசாரணைகள் தொடர்ந்து இடம்பெற்று வருவதாகவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (ம-7)

## மக்களாணை...

வைத்துள்ளதாக பிரதமர் தினேஸ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை தேர்தல்முறை மறுசீரமைப்புக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கடும் எதிர்ப்பை வெளியிட்டிருந்த நிலையில் அதற்கு பதிலளிக்கும்போதே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து வெளியிட்ட பிரதமர் தினேஸ் குணவர்தன,

பாராளுமன்றத் தேர்தல் முறையை மறுசீரமைத்து கலப்பு தேர்தல்முறையொன்று உருவாக்கப்படும் என்றே மக்கள் ஆணையை கடந்த தேர்தலில் பெற்றோம்.

அதனை எமது அரசாங்கத்தின் தலைவர்கள் பலமுறை பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளனர். அதே போன்று வரவு - செலவுத்திட்டங்களுக்கான அனுமதிகளை பெறும் போது கூறியுள்ளோம்.

தேர்தல் ஆணைக்குழுவின் செயற்பாடுகள் தொடர்பில் இரண்டு தரப்பினரும் பாராளுமன்றில் கருத்துக்களைப் பகிர்ந்துள்ளோம்.

அதன்பிரகாரம் பாராளுமன்ற மற்றும் மாகாண சபைத் தேர்தல் களை மாற்றும் கலப்பு தேர்தல் முறை பற்றிய யோசனையொன்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவால்பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றில் அனைத்துக் கட்சிகளுடனும் கலந்துரையாடல்கள் நடத்திய பின்னர் மீண்டும் யோசனைகளை சமர்ப்பிக்க தீர்மானிக்கப்பட்டது.

அதன்பிரகாரம் இன்று பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்துக் கட்சிகளுக்கும் கலந்துரையாடல் நடத்துவதற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதில் கலந்துகொள்ள மாட்டோம் என எதிர்க்கட்சித்தலைவர் கூறியுள்ளார். ஆனால், இந்த விடயம் தொடர்பில் சந்தேகம் கொள்ளாது கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கிறேன்.

சந்தேகங்கள் கொண்டு அரசியல் மாற்றங்களை செய்ய முடியாது. 20 மற்றும் 22 ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் பலமுறை கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டுதான் அவை நிறைவேற்றப்பட்டன. ஆகவே, வெளிப்படைத் தன்மையுடன்தான் நாம் இந்தப் பணிகளை முன்னெடுக்கிறோம்.

தேர்தல்முறையில் மாற்றங்கள் ஏற்பட வேண்டுமென மக்கள் எதிர் பார்த்துள்ளனர். சில பிரதேசங்களுக்கு பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் இல்லாதுள்ளார். இதனால் இந்தப் பணியை முன்னெடுக்க வேண்டியுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-7)

## இந்திய...

இந்திய கடற்படைக்கு சொந்தமான INS 'Airavat' யுத்த கப்பல் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு நேற்று கொழும்பு துறைமுகத்திற்கு வருகை தந்துள்ளது.

124.8 மீற்றர் நீளம் கொண்ட இந்த கப்பலில் 170 கடற்படை ஊழியர்கள் பணியாற்றுகின்றனர்.

கப்பல் தங்கியிருக்கும் காலத்தில், அதன் பணியாளர்கள் இலங்கை கடற்படையுடன் இணைந்து பல பயிற்சிகளில் ஈடுபடவுள்ளனர்.

நாட்டிலுள்ள சில சுற்றுலாத்தலங்களையும் அவர்கள் பார்வையிடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. (ம-7)


கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3513 — சீட்டிழுப்பு திகதி 18.10.2023 — ஆங்கில எழுத்து X — வெற்றி இலக்கங்கள் 23 27 48 57 — X — 50371 — தேசிய லொத்தர் சபை

தன நிதானய — திகதி - 2023.10.18 — சீட்டிழுப்பு இலக்கம் - 1301 — N 06 17 23 76 N — Double Chance 13372

Lucky 7 — திகதி 18.10.2023 — சீட்டிழுப்பு இலக்கம் 0097 — L7 இலக்கம் 3 3 — வெற்றி இலக்கினம் மேஷம் — வெற்றி இலக்கங்கள் 3 1 2 1 2 3

HANDAHANA — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2023.10.18 — சீட்டிழுப்பு இலக்கம் 580 — கடகம் 18 31 40 54 கடகம் — தேசிய லொத்தர் சபை

மெகா பவர் — திகதி 18/10/2023 — சீட்டிழுப்பு இலக்கம் 1619 — X 16 08 30 58 60 — 49576

மஹஜன சம்பத — திகதி 2023/10/18 — சீட்டிழுப்பு இலக்கம் 5271 — C 9 7 0 5 6 9 — தேசிய லொத்தர் சபை

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2245 — வர்ணம் சிவப்பு — சீட்டிழுப்பு திகதி 2023.10.18 — தினம் புதன்கிழமை — வெற்றி இலக்கங்கள் 33 56 62 65 M — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 51,318,720.00 — DLB

சனிதா — திகதி 2023.10.18 — வெற்றி வாரம் 4406 — 07 17 23 55 S — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.61,035,380.00 — செகண்ட் சான்ஸ் 35055 — DLB

ராசி — சீட்டிழுப்பு வாரம் 3957 — வர்ணம் பச்சை — சீட்டிழுப்பு திகதி 2023.10.18 — தினம் புதன்கிழமை — 14 16 32 34 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 8,120,760/- — 674447 — 297 — DLB

கப்ருக — 18.10.2023 — வெற்றி வாரம் 1421 — W 20 14 26 27 73 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 453,711,534.20 — 688232 — 103 — DLB தொலை பேசி: 011-2 333 546-47 Web: www.dlb.lk

ஜயோதா Jayoda — திகதி 2023.10.18 — வெற்றி வாரம் 1966 — வர்ணம் மஞ்சள் — 18 32 47 66 N — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.20,000,000.00 — DLB

அத கோடிபதி ADA KOTIPATHI — புதன்கிழமை — வெற்றி வாரம்: 2071 — சீட்டிழுப்பு திகதி: 2023.10.18 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.62,635,920/- — 02 22 40 66 Y — 599855 — DLB



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடிகர் விஜய்க்கு நாங்கள் கடிதம் எழுதவில்லை

## தமிழ்க்கட்சிகள் மறுப்பு

நடிகர் விஜய்க்கு நாம் எந்த கடிதமும் எழுதவில்லை என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் உள்ளிட்ட தமிழ்க் கட்சித் தலைவர்கள் கூட்டாக தெரிவித்தனர்.

நாளை வெள்ளிக்கிழமை வடக்கு கிழக்கில் ஹர்த்தாலன்று நடிகர் விஜயின் லியோ திரைப்பட காட்சிகளை இலங்கையில் நிறுத்த தமிழ் கட்சிகளின் தலைவர்கள் கடிதம் எழுதியதாக கடிதமொன்று சமூக வலைத்தளங்களில் பரவியது.



. அக்கடிதத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சி.வி.விக்னேஸ்வரன், த.சித்தார்த்தன் , முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான சுரேஷ் பிரேமச்சந்திரன், மாவை சேனாதிராஜா உள்ளிட்டவர்களின் கையொப்பமும் கடிதத்தில் காணப்பட்டது.

குறித்த கடிதம் தொடர்பில் யாழ். ஊடக அமையத்தில் இடம் பெற்ற ஊடக சந்திப்பில் கேட்ட போதே அவ்வாறு தெரிவித்தனர்.

மேலும் தெரிவிக்கையில்,

எந்த கடிதத்தையும் கோரிக்கையையும் நாம் யாருக்கும் அனுப்பவில்லை. அப்படி ஒரு படம் வரப்போற விடயமே எமக்கு தெரியாது.

வடக்கு கிழக்கில் வெள்ளிக்கிழமை பூரண கதவடைப்புக்கு அழைப்பு விடுத்துள்ளோம். அன்றையதினம் திரையரங்கு உரிமையாளர்களும் கதவடைப் புக்கு ஆதரவு தருவார்கள் என மேலும் தெரிவித்தனர். (ம-7)

# ஹர்த்தாலில் பங்கேற்காதீர் புலனாய்வாளர்கள் மிரட்டல்

## வெளிக்கொணர்ந்தார் செல்வம் எம்.பி

இராணுவ மற்றும் பொலிஸ் புலனாய்வுத் துறையினர் வியாபாரிகளை மிரட்டுவதாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், ரெலோ அமைப்பின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு நீதிபதிக்கு நீதி கேட்டு இடம்பெறவுள்ள ஹர்த்தால் தொடர்பில் ஊடகங்களுக்கு நேற்று புதன்கிழமை கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாளை 20ம் திகதி ஹர்த்தாலை அனுஸ்டிக்குமாறு கோருகின்றோம்.

எமது மக்கள் போராட்டத்தின் ஊடாக வந்தவர்கள் ஆகையால் இதற்கு ஆதரவு தருவார்கள் என நம்புகின்றோம். இருந்தாலும் சில சங்கடங்கள் இருக்கின்றது. அன்றாடம் உழைக்கின்ற மக்கள் தமது அன்றைய தேவைக்கு என்ன செய்வார்கள் என்ற நியாயமான கேள்வி எழுகிற போதிலும்தற்போது புதிதாக அடாவடித்தனமான, ஜனநாயக விரோதமான செயற்பாடு நடக்கிறது. இராணுவ மற்றும் பொலிஸ் புலனாய்வுத் துறையினர் வர்த்தக நிலையங்களை நடத்துவோர், சிறுதொழில் செய்வோர், மரக்கறி வியாபாரம் செய்வோர் என அவர்களை மிரட்டி அவர்களை ஹர்த்தாலுக்கு ஆதரவு வழங்க வேண்டாம் எனக் கூறி வருகிறார்கள். அதற்கு எமது கண்டனத்தை தெரிவிக்கின்றோம்.

அனைத்து தமிழ் பேசும் மக்களும் இதற்கு ஆதரவு தருவார்கள். அரசாங்கம் கூடுதலான திணைக்களங்கள் மற்றும் பிக்குகளை வைத்து எமது மக்களை அடக்கிஒடுக்கும்செயற்பாட்டை முன்னெடுக்கிறது. தொடர்ந்தும் ஹர்த்தாலை நடத்த முடியாது. இது ஒரு கடைசியான ஹர்த்தால். அதனால் அனைவரும் ஆதரவு தர வேண்டும் எனத் தெரிவித்தார். (ம-7)

# ஆறு குழந்தைகளில் ஒரு குழந்தை மரணம்

கொழும்பு காசில் வீதி வைத்தியசாலையில் பெண் ஒருவருக்கு ஒரே பிரசவத்தில் பிறந்த ஆறு குழந்தைகளில் ஒரு குழந்தை நேற்று காலை உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குழந்தையின் நுரையீரலில் ரத்தம் பாய்ந்ததால் மரணம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொரளை லேடி ரிட்வே சிறுவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் குழந்தை உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ம-7)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (17477) 076 825 7716 (ஆகாஸ்)

தீபம் கல்வி நிலையம்
THEEBAM EDUCATION CENTRE
இல.11, டேவிட் வீதி, யாழ்ப்பாணம்.
(கலைக்கோட்டம் அருகில்)


தரம் 6
• தமிழ் மொழி மூலம்
• ENGLISH MEDIUM
புதிய அனுமதிகள்

விஜயதசமி நன்நாளில்
24.10.2023 செவ்வாய்க்கிழமை முதல்..

"தீபம் எம் பிள்ளைகளின் எழுச்சி மிகு எதிர்காலம்" (17511)

அனுமதிகளுக்கு அழையுங்கள் - 0772247781 நிர்வாகி


# மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 23 . 02 . 1943 | 16 . 10 . 2023 |

## தாமோதரம்பிள்ளை நவரத்தினம்

### (கமக்காரன் 3ம் யுனீற், மல்லாவி)

அச்சுவேலி பத்தமேனியைப் பிறப்பிடமாகவும் கோவிற்கடவை துன்னாலை மத்தி கரவெட்டியை வதிவிடமாகவும் கொண்ட தாமோதரம்பிள்ளை நவரத்தினம் (16.10.2023) திங்கட்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் கமலாம்பிகையின் அன்புக் கணவரும் ரஜீகரன், ரஜினா, பிரபாகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் இராஜேந்திரன், சந்திரிகா, சுகந்தி ஆகியோரின் மாமனாரும் ராகுலன், ரிஷிகா, ரிசான், ரிஸ்வினி, டரிணி, நவீனா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.10.2023) வியாழக்கிழமை கோயிற்கடவையில் அமைந்துள்ள அன்னாரது வீட்டில் காலை 8 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேரகொண்டை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

கோவிற்கடவை,
துன்னாலை மத்தி, கரவெட்டி. (C-7448)

தகவல் :
குடும்பத்தினர்


விற்பனைக்கு
Lion பொமேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. (17504)
071 649 2654

தேவை
● விற்பனை பிரதிநிதி(Sales Rep)
● களஞ்சிய காப்பாளர்
கல்வித் தகைமை - A/L
சாரதி அனுமதிப் பத்திரம் வேண்டும்
யாழ் மாவட்டத்திற்கு உட்பட்டவர்கள் (17510)
077 978 9223

அமெரிக்க லொத்தர் விசா
2025 ஆம் ஆண்டுக்கான அமெரிக்க லொத்தர் விசா விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.
அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்
திருமுருகன் கொம் நெற்
321, K.K.S Road, Jaffna. (17512)
077 755 4528

வெளிநாடுகளுக்கான DHL பொதிகள் சேவை
மிகக் குறைந்த கட்டணத்தில்
UK - 400/=, Canada - 1000/=
மற்றைய நாடுகளுக்கும் விசேட சலுகைகள்
திருமுருகன் கொம்நெற்
T.P : 0777 55 45 28 (17512)
321, K.K.S. Road, Jaffna.

VILLAGE HOTEL
பஸ் சேவை
JAFFNA EXPRESS
AIRPORT PICK UP DROP SERVICE
வடமராட்சி - யாழ்ப்பாணம் - கொழும்பு
வடமராட்சி - கொடிகாமம் - கொழும்பு
2800/= (17484)
T.P:077 544 8503

Canada and Italy Visa
Canada மற்றும் Italy போன்ற நாடுகளுக்கான Short Term மற்றும் Long Term விசாக்கள் பெற்றுத் தரப்படும். மேலும் சகல நாடுகளுக்கான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் செய்து தரப்படும்.
Visa Consultant
134, Adiyapatham Road, Thirunelvely, Jaffna. (17491)
077 038 5584

அமெரிக்க அதிஸ்ட வீசா காத்திருக்காமல் உடனே பதியுங்கள்
2024 நீங்களும் அமெரிக்காவில்...
இன்னும் 15 நாட்களே
55000 இலவச விசாக்கள்
0768226244
V2 Travels (C-7449)
V2 TRAVELS

அலுவலக வேலை - பயிற்சி
2 மாத கால பயிற்சியுடன் உடனடி வேலைவாய்ப்பு
*நீங்கள் A/L எடுத்துவிட்டு மேற்படிப்புக்காக / வேலைக்காக காத்திருப்பவரா?
*இதோ! 2 மாத கால அலுவலக வேலையுடனான பயிற்சி நெறி
*பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும் (C-7449)
சம்பளம் - 60,000/- (2 மாதம்)
V2 TRAVELS - 0777-068-777


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.101, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.10.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org